முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 2—11—56 செந்தமிழ் பதிப்பகம் வேலூர், சேலம் வெள்ளி | ஒலி 30

★ ஐந்து ரூபாய்தானும்; அந்தோ, பரிதாபம்! ★

மலையைக் கேட்டார்கள்; அணுவைக் கொடுத்திருக்கிறார்கள்!

மூன்று வேளை உணவு கேட்டார்கள்; ஒரு வேளை சிற்றுண்டி கொடுத்திருக்கிறார்கள்!

உடுப்பதற்குப் போதிய உடை கேட்டார்கள்; ஒழு முழத் துண்டு கொடுத்திருக்கிறார்கள்!

கூழுக்கு உப்பில்லை என்று கூவி அழுதார்கள்; ஒரு குவளை குடி தண்ணீர் கொடுத்திருக்கிறார்கள்!

ஆமாம்; ஊதிய உயர்வு கோரி ஓயாமல் ஒழியாமல் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த என். ஜி. ஓ.க்களுக்கு ஐந்தே ரூபாய்கள் பஞ்சப்படியில் அதிகமாகத் தரப்போகிறார்கள், அரசாங்கத்தினர்!

மாதம் ரூபாய் மூன்னூறு சம்பளம் பெறும் பணியாளர் உட்பட அனைவருக்கும் இச்சலுகை உண்டாம்!

கண் துடைப்பு வேலை!

போலித்தனம்!

பசியால் அழும் பாலகனுக்கு வாயில் 'பீடிங் ரப்பர்' பொறுத்தும் காரியம்!

—இப்படிப் பல பொருள் சொல்லலாம் இப்போது அரசாங்கம் மேற் கொண்டிருக்கும் பணிக்கு!

வான் நிலவு வேண்டுமென்று கேட்டு அழுகிறது குழந்தை! சற்று புத்திசாலியான தாயார் பார்த்தாளாம்; குழந்தையைச் சமாதானம் செய்ய முடியாது என்பதைக் கண்டு, ஓடிச் சென்று உள்ளேயிருந்த நிலக் கண்ணாடியை எடுத்து வந்தாள்! செறுமி. செறுமி அழுகின்ற பாலகனிடம் கொடுத்தாள்! சந்திரனுடைய நிழலுடம்பு அந்தக் கண்ணாடியிலே சதிராடியது!

அதைக் குழந்தையும் பார்த்தான்! அம்மா நிலவைப் பிடித்துக் கொடுத்து விட்டாளே என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்து துள்ளிக் குதித்தானும்!

—இந்தப் பழங்கதைதான் நினைவுக்கு வருகிறது சென்னை அரசினர் என். ஜி. ஓ க்களுக்கு இப்போது தந்திருக்கும் சலுகைகளை நினைக்கும்போது!

ஆனால் ஒரே ஒரு திருத்தம், இந்த உவமைக் கதையிலே!

அங்கே குழந்தை நிலவுக்காக அழுதது; எட்டாத பொருளுக்காகக் கொட்டாவி விட்டது!

இங்குள்ள என். ஜி. ஓ. க் குழந்தையோ நிலவுக்காக அல்ல; உணவுக்காக அழுகிறது; சற்று முயன்றால் சித்தமாகக்கூடிய செயல் கருதியே கூக்குரல் போடுகிறது!

நிலவைத்தான் கண்ணாடியில் பிடித்து, பாரடா; உன் கையில் பூரணச் சந்திரன்—என்று ஏமாற்ற முடியும்!

உணவைக் கண்ணாடியில் பிடித்துக் காட்டினால் பசி தீருமா? வறுமை ஓடுமா? மிடிமை மறையுமா!

—என். ஜி. ஓ. க்களுக்கு ஐந்து ரூபாய் உயர்வு கொடுத்திருப்பது கண்ணாடியில் உணவைக் காட்டி, உங்கள் பசி தீர்க்கும் மாமருந்து இதோ!—என்று கூறுவதைப் போலத்தான் இருக்கிறது!

கேவலம், இந்த ஐந்து ரூபாய் பெறுவதற்குத்தான் அவர்கள் எவ்வளவு பெரிய காட்டாறுகளை; கொடும் விலங்குகளை; கொள்ளிக் கட்டைகளைக் கடந்திருக்கின்றனர்!

மாநாடுகூட்டி கண்டனக்கணைகளைப் பாய்ச்சினார்கள்; ஊதியம் அதிகம் தேவையென்று பன்முறை வேண்டினார்கள்!

மாத முதல் நாளன்று சம்பளம் வாங்க மறுத்தார்கள்!

அடையாள வேலை நிறுத்தம் செய்வோம் என்பதை எச்சரிக்கையாக்கிக் காட்டினார்கள்!

ஆசியாவின் ஜோதி, பஞ்சசீலம் தந்து உலகத்துக்கெல்லாம் அமைதிவழி காட்டும் அற்புத சிகாமணி பண்டித நேருவிடம் சென்றால் தங்கள் வாழ்க்கையில் அமைதி கிடைக்குமே—என நினைத்து புது டில்லிக்கு ஓடினார்கள்!

அவ்வளவு ஏன்; அவர்களில் ஆர்வம் மிகுந்த தோழர் ஒருவர்கூட சென்னை ஜார்ஜ் கோட்டையிலே உண்ணாவிரதம் இருந்தார்!

—பாவம்; பொட்டுப் பூச்சிகளைப் போன்றவர்கள் என். ஜி. ஓ. க்கள்! அனைவருமே பரம சாதுக்கள்! பேனா பிடிக்கும் வலியைத் தவிர வேறெந்த ஆயுதமேந்தும் திறனும் அவர்கள் கரங்களுக்குக் கிடையாது! அவர்கள் நடத்திய இந்த அகிம்சா போராட்டங்களையாவது சிறிது கவனித்தார்களா, இந்த ஆட்சியாளர்கள்?

இல்லை!

பார்க்க முடியாது என்று கூறி பேட்டியளிக்க மறுத்தார் பண்டிதர்!

சம்பளம் வாங்க மறுப்பது நீடித்தால் — அவர்களது போராட்ட வேகம் அதிகரித்தால் — சம்மந்தப்பட்டவர்கள் மீது எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்தே தீருவேன்—என்று இட்லரிசப் பாணியில் மிரட்டல் ஆயுதத்தைக் காட்டி பய முறுத்திப் பார்த்தார் நிதி அமைச்சர் சுப்ரமணியனார்!

—பாவம்; எதிர்த்துப் போராடித் தீரவேண்டிய சங்கடமான; ஆனால் தவிர்க்க முடியாத நிலைமையை என். ஜி. ஓ.க்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தார்கள்!

புழுவை மிதித்து மிதித்துப் புலியாக்கினார்கள்!

நெருக்கடியான சந்தர்ப்பத்தில்தான் மனிதனுக்குப் பல

❋ தொடர்ச்சி 7-ம் பக்கம்

விரைவில் ஆரம்பமாகிறது!

சுருளி மலை

அடுத்த இதழில் துவங்கும் தேதி அறிவிக்கப்படும்!

'மாஸ்கோ' மாறாது!

மாறன், எம். ஏ.

"உங்கள் மதம் எது?"

"கம்யூனிசம்!"

"உங்கள் வேதப் புத்தகத்தின் பெயர் என்ன?"

"மார்க்ஸ்!"

"உங்கள் தலைமைப் பீடம் எங்கிருக்கிறது?"

ரஷ்யாவில்!"

"நீங்கள்?"

"நாங்கள் இந்த நாட்டில்தான் இருக்கிறோம்; ஆனால் உத்தரவு அங்கிருந்து வரும்."

—இந்த நாட்டில் மட்டுமல்ல; வேறு எந்த நாட்டுக் கம்யூனிஸ்ட்டுகளைக் கேட்டாலும் இதே பதில்தான் கிடைக்கும்!

ரஷ்யாவிலே எப்படி முதலாளித்துவம், ஒழிக்கப்பட்டதோ அதே வழி முறைகள்.—

அங்கே நிலப் பிரபுத்துவம் எப்படி நிர்மூலமாக்கப் பட்டதோ அதே செயற்பாடுகள்—

இங்கும், எங்கும் கடைப் பிடிக்கப்பட்டு வந்தன, கம்யூனிஸ்ட் தோழர்களால்!

மண்ணுக்கு மண் விதைகள் கூட பலன் தருவதில் வேறுபடுகின்றனவே; இது கொள்கையாயிற்றே—மனிதர்கள் பின்பற்ற வேண்டிய மகத்தான இலட்சியமாயிற்றே! அதில் மக்களின் மனோபாவத்துக்கு ஏற்ற வாறு சிறு மாற்றங்கள் செய்ய வேண்டாமா?

—கேள்வி கேட்கப்பட்டது கோடானு கோடி முறை.

● இவருக்குப் பிறகு ஆட்டம் கண்டிருக்கிறது ரஷ்ய 'சாம் ராஜ்யம்'!

பாவம்; அவர்கள் என்ன செய்வார்கள்? மாஸ்கோ இதற்கு எவ்வித பதிலையும் தயார் செய்து கொடுக்கவில்லை; ஊமைகளாய் இருந்தார்கள்.

அந்தோ பரிதாபம்!

பொதுவுடமைத் தோழர்களின் விழி யிரண்டையும் திறந்து நல்வழி காட்டிடும் வித்தகினதாய் போலந்தும், ஹங்கேரியும் உரிமைக் குரலெடுத்து அகில உலகமும் கேட்டிடும் வண்ணம் முழக்கமிட்டு விட்டன, இப்போது!

போலந்து–ரஷ்யாவின் கூடாரத்தில் ஒரு நாடாக விளங்கி வந்தது, இதுநாள் வரை!

இரும்புத் திரை நாடுகளில் ஒன்று எனக் கூறிடுவர், போலந்தை!

ஸ்டாலின் என்னும் ஆயர் தலைவனின் கோலுக்கு அடி பணிந்திடும் ஆட்டு மந்தைகள்—

ரஷ்யாவின் நலனுக்காகத் தங்கள் நலனைத் தியாகம் செய்திடும் இளிச்சவாயர்கள்—

ஏமாற்றத்தின் ஏகப்பிரதிநிதிகள்—

இப்படி யெல்லாம் கருதப் பட்டார்கள், போலந்துக் குடிமக்கள்!

சிந்தனைச் சுதந்தரம் இன்னதென்று தெரியாதவர்கள்—

சிரித்தால் சட்டம் சுட்டுப் பொசுக்கிவிடுமோ என்று அஞ்சி நடுங்குபவர்கள்—

அடங்கிக் கிடப்பவர்கள்—

ஆமைகள்—

ஊமைகள்—

அடிமைகள்—

—பட்டப் பெயர்கள் அவர்களைச் சுற்றி வட்டமிட்டன!

அந்த போலந்து நாட்டிலே தான் இப்போது புரட்சியின் பொறி பெருந் தியாக—தீயோரின் திமிரடக்கும் திகிலாக உருவமெடுத்திருக்கிறது!

எத்தனை நாட்களுக்குத்தான் எத்தர்களாம் ரஷ்யர்களின் அதிகாரத்துக்கு அடங்கிக் கிடப்பது? நாங்கள் என்ன இனவுணர்ச்சி இழந்தவர்களா? இழிவையும், பழியையும் இலட்சிய விருந்து என ஏற்றுக் கொள்ளும் மரக்கட்டைகளா?

—கேள்வி பிறந்தது. போலந்து பூமியில்!

முடிவு?

உடன் கிலி பிறந்தது, மாஸ்கோவில்!

விளைவு?

மாற்றியமைக்கப்பட்டது அடிமை வாழ்வு!

தூக்கி எறிந்தனர் அவர்கள் கரங்களைக் கட்டியிருந்த தளைகளை!

இப்போது போலந்தின் தலைவராக வந்திருப்பவர் கோமுல்கா!

இவர்தான் போலந்துக்குப் புது உணர்வு வழங்கியவர். ஸ்டாலின் உயிரோடிருந்தால் இந்நேரம் இவர் மண்ணுகி அவர் புதைக்கப்பட்ட இடத்திலே புல் முளைத்துப் போயிருக்கும்.

ஏன்; அவர் என்ன தவறு செய்தார்?

போலந்து பிறருடைய தலையீடோ குறுக்கீடோ இன்றி தானே வகுத்துக் கொண்ட சுதந்தரப் பாதையில் பீடுநடை பழக வேண்டுமென்று சொன்னர்!

அன்று இதை ஒப்பவில்லை மாஸ்கோ!

இன்றோ போலந்து கூறுவதற்குத் தலையசைத்துத் தீர வேண்டிய சங்கடமான நிலைமை ஏற்பட்டு விட்டது, அதற்கு!

ரஷ்யாவிலேயுள்ள ஆறு தலைவர்களும் போலந்திலே புரட்சிப் புயல் என்று கேள்விப் பட்டதும் அந்த நாட்டுக்கு அவசர அவசரமாக ஓடி வந்தனர்.

ஓடி வந்து என்ன செய்தனர்?

அது யாருக்கும் தெரியவில்லை, இது வரையில்!

ஆனால் ரஷ்யத் தலைவர்கள் திரும்பிய பிறகும் கோமுல்கா பதவியிலிருப்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இது எதைக் குறிக்கிறது?

கோமுல்காவின் கை ஓங்கியிருக்கிறது. அதாவது, போலந்து ரஷ்யாவின் அடிமையாக இருக்க வேண்டியதில்லை; சம அந்தஸ்து பெற்ற நண்பனாக இருக்கலாம் — இந்தக் கொள்கை இன்று கோபுர மேறி விட்டது!

இது வரையில் ஸ்டாலினின் சீடனாக இருந்து, போலந்தின் உரிமையைப் பறிப்பதில் உறுதுணை செய்த ரொக்க சாவ்ஸ்கி 'பொலிட் பீரோவி'லிருந்து விலகி விட்டார்.

அவர் வகித்து வந்த பாதுகாப்பு மந்திரி பதவியிலிருந்துகூட விடுமுறை கொடுத்து அனுப்பி விட்டாராம் கோமுல்கா!

ரஷ்யா ஆணையிடும்;

போலந்து அடங்கிக் கேட்கும்; முடங்கிப் பதில்கூறும்; பணியாற்றும்-இனிமேல் இவையெல்லாம் பழைய கதையாகி விட்டன, அங்கே!

இதே முறையைத்தான் பின்பற்றி ஹங்கேரி நாடும் தன்னுடைய சுதந்தரப் பிரகடனத்தை வெளியிட்டிருக்கிறது.

போலந்திலே கோமுல்கா! அங்கே நாகி! உரிமையின் காவலர்களாகக் கிளம்பி யிருக்கின்றனர் இவர்கள்!

நாகி தலைவராகப் பிரகடனப் படுத்தப் பட்டும்கூட அங்கே கலகம் ஓயவில்லை.

எனவே ரஷ்யா தனது இராணுவத்தை அனுப்பி, கலகத்தை ஒடுக்க ஏற்பாடு செய்தது!

புதுத் தலைவர் பதவிக்கு வந்ததுமே அறிவித்தார்:

1. இனிமேல் ஹங்கேரி ரஷ்யாவுடன் தேசிய சுதந்திரத்தை உறுதிப்படுத்திக் கொண்டு, அதன் அடிப்படையில் தனது தொடர்பை அமைத்துக் கொள்ளும்.

2. ஹங்கேரியிலே இருந்து வரும் ரஷ்யத் துருப்புகள் அனைத்தும் உடனே வெளியேற்றப்படும்.

'போலந்திலே தலைவராக வந்திருக்கிற கோமுல்காவும், ஹங்கேரியின் முதல்வராக வந்திருக்கிற நாகியும் கம்யூனிசத்தின் எதிரிகளோ? அவர்கள் அந்தந்த நாடுகளிலே முதலாளித்துவத்துக்கு வித்தூன்றும் சியாங்கே ஷேக்குகளாக முளைத்து விடுவார்களோ'— என்று நினைத்து விடாதீர்கள்.

பதவிக்கு வந்தும், கிளர்ச்சி அடங்காததைக் கண்டு கலகக்காரர்களை நோக்கி நாகி அறிவித்திருந்தார்:

"மறுபடியும் முதலாளித்துவ நுகத்தடி உங்கள் தோளில் தூக்கி வைக்கப்படுவதை விரும்பாமலிருந்தால் உடனடியாக நாட்டில் அமைதியை நிலைநாட்ட நீங்கள் எனக்கு உதவ வேண்டும்."

—நாகியின் வேண்டுகோள் இது!

இதற்கு விளக்கவுரை தருவது போல கோமுல்கா குறிப்பிட்டார் தனது முதல் சொற்பொழிவில்:

"பொதுவுடமையை நோக்கிச் செல்வதற்கு ஒன்றுக்கு

● இவருக்குப் பிறகு ஆடப் போகிறது ஏக இந்திய சாம் ராஜ்யம்!

மேலான வழிகள் இருக்கின்றன!"

இதனால் பெறப்படுவது யாது?

போலந்து, ஹங்கேரித் தலைவர்கள் பொதுவுடமையையே விரும்புகின்றனர்; முதலாளித்துவ முறையை, அதற்கு வால் பிடிக்கும் சியாங்கே ஷேக் தன்மையை எதிர்க்கின்றனர்; முழு மூச்சுடன் எதிர்க்கின்றனர்!

ஆனால் அதே சமயம் அவர்கள் பொதுவுடமையை அடைய ரஷ்யா சென்ற பாதையிலே செல்ல விரும்பவில்லை.

ஒன்றுக்கு மேற்பட்ட பாதை உண்டு என்கிறார், கோமுல்கா!

ரஷ்யா பொதுவுடைமையை நோக்கிப் பயணமாகி யிருக்கும்

✻ தொடர்ச்சி 10-ம் பக்கம்

சென்னை 2-11-56 வெள்ளி

எதிர்க் கட்சி!

"நான் இருபது ஆண்டுகள் எதிர்க் கட்சித் தலைவனாயிருந்த பெருமையைப் பெறுகிறேன்!"

—புன்னகை தவழ, புளகாங்கிதம் கொப்பளிக்க மார்தட்டிக் கூறினார் சில வாரங்களுக்கு முன்பு சென்னை வந்து சென்ற தொழிற் கட்சித் தலைவர் ஆட்லி!

எதிர்க் கட்சிக்குத் தலைவனாயிருப்பது அங்கே ஆட்சியாளர்களால் இகழத் தக்க நிலை யல்ல!

யார் அவன்? எதிர்க் கட்சிக்காரனா? அவர்களுக்கு போடு 144!

அவர்கள் நடத்தும் ஏடுகளை இழுத்துப் பூட்டு!

அவர்கள் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காதே!

தேர்தலில் தனிச் சின்னம் கோறினால் இல்லை என்று கூறு!

வானொலியிலே அவர்கள் பேச்சுக்களையும், செய்திகளையும் இருட்டடிப்பு செய்!

கலையுலகிலே அவர்கள் பிரச்சாரம் பிரபலமாயிருந்தால் அவர்களுக்கெல்லாம் முடிந்தவரையில் தொல்லை கொடு!

தலைமை அமைச்சராயிருந்தாலும் அந்த ஸ்தானத்தைப் பற்றிக் கவலையில்லை; அவர்களைப் பற்றிய அபாண்டங்களையும், அண்டப் புளுகுகளையும் கதை கதையாகக் கட்டிவிடு!

—இதுதான் இந்த உபகண்டத்திலே எதிர்க்கட்சிகளின் நிலையாக இருந்து வருகிறது!

இந்த நாட்டிலே சிசு மரணம் அதிகம் என்பார்கள். அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையிலேகூட இங்கே அந்த வாசகம் பொறுத்தமாய் அமைந்திருக்கிறது!

ஆட்சியாளர் தரும் எண்ணற்ற இடையூறுகள் காரணமாக தவழும் பருவத்திலேயே குழி தோண்டிப் புதைக்கப்பட்ட கட்சிகள் எத்தனையோ!

அப்படி ஏதேனும் ஒரு கட்சி வளர்ந்துவிடும் எனத் தெரிந்தால் ஆளும் நிலையிலிருக்கும் இயக்கம் உடன் தனது தன்மானத்தைத் துரசுக்கும் கீழாக மதித்து, வேசி வேடம் புனைந்து, நீ என்னை அடைந்தால் உனக்கு அது கிடைக்கும்; இது கிடைக்கும் எனக்கூறி அந்தக் குழந்தை மனம் கொண்ட அப்பாவிகளின் இதயத்தைக் கள்ளத்தனமாய்க் கவர்ந்து; பச்சோந்தித் தலைவர்களை நம்பி வாழ்ந்த ஆயிரமாயிரவர்களை அந்தரத்தில் விட்டுவிட்டு தங்களோடு ஐக்கியப் படுத்திக் கொள்கின்றது.

—இந்த நிலையில்; சேவலைப்போல் நிமிர்ந்து நின்ற எவ்வளவோ கட்சிகளது பளபளப்பு நிரம்பிய வருங்காலத்தை அழித்து, தனது 'பலிசை'ப் பெருக்க முயன்றிருக்கிறது, காங்கிரஸ் கட்சி!

கொள்கை வலியால் ஒரு கட்சி இன்னொரு கட்சியை இழுத்துக் கொள்வதில் தவறேதுவும் காணமுடியாது; அப்படிச் செய்வதுதான் நாகரிகமான செயலும்கூட!

ஆனால் இங்கு அவ்வாறு நடக்கிறது?

உதாரணம் கூறவேண்டுமானால் எதுமறியாத மைனர் பெண்களை ஆசை காட்டிக் கவர்ந்து செல்லும் குண்டர்களைப்போல பதவி ஆசை காட்டி சிறு கட்சித் தலைவர்களை பறித்துச் சென்று கொண்டிருக்கிறது காங்கரஸ் கட்சி!

காரணம்; தானே ஆளவேண்டுமென்ற பேராசையும், பதவியிலே அதற்கிருக்கும் பைத்தியமும்தான் ஆகும்!

அதனால்தான் கோலோச்சும் காங்கிரஸ்காரர்கள் எதிர்க்கட்சியினரின் முன்னேற்றப் பாதையிலே கடத்தற்கரிய கற் பாறைகளையெல்லாம் வீசியெறிந்து வேடிக்கை பார்க்கின்றனர்!

ஆட்லி இருபது ஆண்டுகள் இங்கிலாந்திலே எதிர்கட்சியொன்றின் தலைவராக இருந்திருக்கிறார்!

ஆட்சியிலிருந்த கன்சர் வேட்டிவ் கட்சியின்மீது கண்டனக் கணைகளைப் பொழிந்திருக்கிறார்!

அவரது கட்சிப் பத்திரிகைகள் தவறு நேர்ந்தபோதெல்லாம் அரசாங்கத்தைக் கண்டித்திருக்கின்றன!

—இருந்தும் ஆட்லி எத்தனை தடவைகள் சிறைக்குச் சென்றிருக்கிறார்?

அவரது கட்சித் தொண்டர்கள் எத்தனை தடவை தடியடிபட்டிருக்கின்றனர்?

செந்நீர் சிந்தியதுண்டா தொழிற் கட்சியின் தொண்டர்கள்? சிரம் அறுத்துக் கொடுத்திருக்கின்றனரா அந்தக் கட்சியின் காளையர்?

இல்லை!

ஏனெனில் அந்த அளவுக்கு நிலைமையை ஏற்படுத்தவில்லை பதவி வகிக்கும் கட்சி!

அதிகாரத்திலிருக்கிறோம்; நாம் எதையும் செய்யலாம் என்கிற ஆணவம் ஆளும் கட்சிக்கு ஏற்படவில்லை, அங்கே!

எதிர்க் கட்சி வேண்டும்; வேண்டும்—என்று நாளெல்லாம் கூச்சல் எழுப்பும் ஆச்சாரியார்கள் அதிகம் இருக்கிற இந்த நாட்டிலே நடப்பது என்ன?

வெட்கக்கேடு! வேதனைக்காடு!—இவைதான் நிரம்பியிருக்கின்றன இங்கே!

ஆனால் இந்த இழிதகைச் செயல்கள் எதற்குமே இடம் தரவில்லை ஹங்கேரி நாடு!

சென்ற கிழமை 'புரட்சி' நடத்தி புதுவாழ்வு பெற்றிருக்கும் ஹங்கேரியில் நாகி பதவிக்கு வந்ததும் புதியதொரு அறிக்கையொன்று வெளிவந்திருக்கிறது!

அங்கே இனிமேல் ஒரு கட்சி ஆட்சி ஒழிக்கப்பட்டுவிடுமாம்!

எல்லாக் கட்சிக்காரர்களையும் அழைத்து கூட்டாட்சி நிறுவப் போகிறார், நாகி!

நம்முடைய கட்சிதானே விடுதலைப் போரில் பெரும் பங்கு ஏற்றது; அதில் அயலவருக்கு என்ன பங்கு?-என்று கேட்டிடவில்லை, நாகி!

நாட்டு நலன் ஒன்றையே பெரிதெனக் கருதி, பெருந் தன்மை பொங்கி வழிய; எல்லாக் கட்சியினரையும் புதிய சமுதாயம் அமைத்திடும் பெரும்பணி புரிய ஒரு வாய்ப்பு கொடுத்திருக்கிறார், நாகி!

இன்று சீனாவில் இது போன்ற கூட்டாட்சி முறையைத்தான் அமைத்துக் கொடுத்திருக்கிறார், மாசேதுங்!

இதுபோன்றதொரு முறையினைத்தான் செய்திருக்க வேண்டும் இந்த உபகண்டத்துக்கு விடுதலை வாங்கித் தந்ததாகக் கூறிக்கொள்ளும் காங்கிரஸ் கட்சியினர்!

அதைச் செய்யாமல் அர்த்த ராத்திரியிலே பதவி பெற்று அதைச் சொந்த உடமைபோல் கருதிக் காரிய மாற்றி வருகின்றனர், ஒரு நாள் கருகியே தீர வேண்டிய காங்கிரஸ் கட்சியினர்!

புது நடை பழகும் ஹங்கேரி சிரிக்கிறது; சீ! சீ! என்று காரி உமிழ்கிறது, ஆணவப் போக்கு ஒன்றினையே உடமையாகக் கொண்டிருக்கும் தேசியத் தோழர்களைப் பார்த்து!

இதைக் கண்டாவது அவர்களது அதிகாரத் திமிரும், ஆணவச் செறுக்கும் குறையுமா? இந்த நாட்டு ஜனநாயகத்திலேயுள்ள குறை தீருமா?

'இரும்புத் திரை'யே கிழிந்தது! 'காதித் திரை' என்னுவது?

❋ 10-ம் பக்கத் தொடர்ச்சி

திராவிடப் பெருங்குடி மக்களின் நல்வாழ்வுக்குப் பணியாற்றிட இன்றே துந்துபி முழக்கத்தோடு துவங்கலாம் என்பதைத்தான் கோமுல்கா—நாகி போன்றோர் தங்கள் செயல்மூலம் எடுத்துக் கூறுகின்றனர் அவர்களுக்கு!

❋

போலந்து—ஹங்கேரி, கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு மட்டும் பாடமாக அமையவில்லை. அது ஏக இந்திய ஏகாதிபத்தியக் கூடாரத்தின் அடித்தளத்திலும் ஆயிரங்கோடி அணுகுண்டுகளைப் போட்டிருக்கிறது.

அங்கே நடைபெற்ற கிளர்ச்சிகளை விமர்சனம் செய்யும்போது நேரு குறிப்பிட்டார்:

இப்போது போலந்திலும், ஹங்கேரியிலும் நடைபெற்றுக் கொண்டிருப்பது தேசிய எழுச்சியைக் குறிப்பதாகும்! என்று! பண்டிதருடைய கருத்துரை இது!

தேசிய எழுச்சி!

ஆமாம்; போலந்து ஹங்கேரி ஆகிய நாடுகளிலே வசிக்கும் தேசிய இனங்கள் இன்று முழு உரிமை கோரி போர் முரசு கொட்டியிருக்கின்றன!

ரஷ்யாவுக்கு அடி பணிந்து நடப்பது;

ரஷ்யத் துருப்புகளைத் தங்கள் நாட்டிலே வைத்திருப்பது;

—இவை ஹங்கேரியின் தன்மானத்துக்கே தீ வைக்கும் தன்மை கொண்டது என்பது உணரப்பட்டு விட்டது!

தன்மானம்; தேசிய உணர்ச்சி — மிக மிக நெருங்கிய தொடர்பு கொண்டவை! ஆமாம்; ஒரு நாட்டின் தன்மானம்தானே தேசிய உணர்ச்சி!

அன்னியனுக்கு ஏவல் புரிவதா?

—தேசிய உணர்ச்சி என்கிற எரிமலை வெடித்துச் சிதறியது; அதனால் சிதறி விட்டது ரஷ்யர் ஆதிக்கம்!

இந்தத் தேசிய உணர்ச்சி இது வரையில் என்ன செய்து கொண்டிருந்தது?

இதற்கு முன்பே இந்தக் கிளர்ச்சிகள் துவங்கி, சுதந்தரப் பிரகடனங்கள் வெளிவராத காரணம் என்ன?

ஒரே ஒரு காரணம்தான்!

ஸ்டாலின் என்கிற 'சரித்திரத்தின் மகத்தான சர்வாதிகாரி உயிரோடு இருந்தார்! அதனால் உரிமைக் குரல் உதடுகளைத் திறந்து கொண்டு வெளிவர முடியவில்லை!

குருஷேவ் கோஷ்டியினர் வர்ணித்தபடி ஸ்டாலின் வரலாற்றிலேயே கொடுமைக்குப் பெயர் பெற்ற ஒரு 'கிரிமினல்'!

அப்போது இந்தத் தேசியக் கிளர்ச்சிக்கான துவக்கம் நடத்தப்பட்டிருந்தால் எல்லாமே துவம்சமாயிருக்கும்!

அந்தச் சர்வாதிகாரி ஸ்டாலினின் பிணம் சாய்ந்தது!

பட்டொளி வீசப் புறப்பட்டுவிட்டது தேசிய உணர்ச்சி!

இது 'இரும்புத் திரை நாடுகள்'—என்று கூறப்படுகிற பிரதேசத்தில்!

இதே கதைதான் ஏக இந்தியப் பாரதப் பிரதேசத்திலும் நடைபெறப் போகிறது!

அங்கே ஸ்டாலினுக்குப் பிறகு தேசிய விடுதலைக் கிளர்ச்சி! இங்கேயும் அப்படித்தான்; நேருவுக்குப் பிறகு நிச்சயம் இங்கே தங்கு தடையின்றி உரிமைச் சுடர் ஒளிவிடப் போகிறது!

அங்கே ஸ்டாலின் சர்வாதிகாரி; அதனால் அவர் ஆயுட்காலத்தில் யாரும் உண்மைக்கு வக்காலத்து வாங்க முடியவில்லை.

இங்கு?

நேருவைச் சர்வாதிகாரி என்று கூறிவிடலாம்; ஆனால் தேசியத் தோழர்கள் மனம் புழுங்குவர்!

அவரைச் சர்வாதிகாரி என்று கூறுவதைவிட சாகசக்காரர் என்று கூறுவதே மிகப் பொறுத்தம்!

அந்த சாகசக்காரரின் சாவுக்குப் பிறகுதான் இங்கேயும் 'போலந்து-ஹங்கேரிகள்' புறப்படப்போகின்றன!

ரஷ்யாவிற்கும் இப்போது தனியுரிமை கோரும் நாடுகளுக்கும் அப்படி என்ன வேறுபாடு இருந்தன?

ஹங்கேரி—போலந்து முதலாளித்துவ நாடுகளா?

இல்லை.

எல்லோருமே ஒரு இலட்சியத்தை நிலைநாட்டுவதற்குத்தான் முயல்கின்றனர்.

இருந்தும் ஒரே இலட்சியம் அவர்களை ஒரே கூடாரத்துக்குள் பிணைத்து வைக்க முடியவில்லை!

தேசிய இனங்கள் என்றால் அவை தனித்துத்தான், தனி நாடாகத்தான் இயங்கவேண்டுமென்பதை மீண்டும் நிலைநாட்டிவிட்டன அந்த நாடுகள்!

இந்த உபகண்டத்திலோ அந்த இலட்சியத்திலும்கூட திராவிட நாட்டைச் சேர்ந்த நமக்கும், வட நாட்டு ஏகாதிபத்திய வாதிகளுக்கும் எவ்வளவோ வித்தியாசம்!

அந்தச் சர்வாதிகார நாட்டிலேயே தேசிய இனத்தின் உணர்ச்சிகளுக்கு அதிக நாள் தடைபோட முடியவில்லை.

இவர்கள் எத்தனை நாளுக்கு திராவிடத்தின் இன உணர்வுக்கு அணைபோடப் போகிறார்கள்!

உலகப் பெரு வல்லரசுகளில் ஒன்றான ரஷ்யாவே தோற்று விட்டது.

பாவம்! புது டெல்லிக்காரர்கள் என்ன செய்துவிடப் போகிறார்கள்!

போலந்தும் ஹங்கேரியும் நம்மை நோக்கி வெற்றி! வெற்றி!!—என்று முழக்கமிடுகின்றன. அதையேதான் திருப்பிச்சொல்ல ஆசைப்படுகிறோம், இந்த இன உணர்வு அழிந்த மரக் கட்டைகளுக்கும்!

வெல்க தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டம்! ●

நவம்பர்-1

நவம்பர் 1—தமிழரசு உதயமென்று கொண்டாடுகிறது அரசாங்கம்!

மொழியின் அடிப்படையில் மாநிலங்களைப் பிரித்து விட்டோம் — என்று கூவி தோள் தட்டி ஆடுகின்றனர் தேசியத் தோழர்கள்!

கர்நாடகம்

கேரளம்

ஆந்திரம்

தமிழகம்

—மொழிவழியில் மாநிலம் பிரிவது நமக்கும் ஏற்புடையதுதான்!

மொழிவழி பிரிந்து இனவழி ஒன்று கூடுவதுதான் நாம் கேட்கும் திராவிட நாடு!

அந்த இலட்சிய ஏட்டிற்கு முன்னுரை வரைவதைப் போன்றதுதான் மொழிவாரி மாநிலப் பிரிவினை!

ஆனால் இப்போது பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றந்த மாநிலங்கள் — இவைகளை நாம் எப்படி மொழிவழி மாநிலங்கள் என ஒப்புக்கொள்ள முடியும்?

தமிழர்களே வாழும் தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் தமிழ் நாட்டுடன் சேரவில்லை!

வட எல்லைப் பகுதிகளின் பிரச்சினை இன்னும் வாக்குறுதி வடிவத்திலேயே இருக்கிறது!

அதுமட்டுமா?

மதுத் தேன் ததும்பும் புது மலரை மலர் என்று அழைக்காமல் மண்ணாங்கட்டி என்று அழைத்திடும் மதயானைபோல தமிழகத்தை சென்னை என்று அழைக்க அனுமதித்திடும் அவமானத்தையும் தாங்கிக் கொள்ள வேண்டியவளாயிருக்கிறாள் தமிழ்த் தாய்!

—இந்தக் கேடுகளைக் களைந்தெறிய முன்வரவில்லை; நவம்பர் 1-ம் தேதியை மாநிலப் புனரமைப்பு தினமாகக் கொண்டாட வந்து விட்டனர், தேசிய வீரர்கள்!

அதற்கென முதலமைச்சர் காமராசர் செய்தி அனுப்பியிருக்கிறார்;

"சென்னை மாநிலத்தின் அளவு குறைந்து விட்டாலும்கூட தேசத்தின் முன்னேற்றத்திற்கு அதன் சேவை எப்போதும்போல பெரிதாகத்தான் இருக்கும்!"

அளவு குறைந்து விட்டதாம்!

தேவிகுளம், பீர்மேடு, வட எல்லைப் பகுதிகள்—இவை பறிபோனதைக் குறிப்பிடவில்லை அவர்! இதர மொழிப் பகுதிகள் பிரிந்து சென்று விட்டனவே—என்று பரிதாபப்படுகிறார்!

இருந்தாலும் தேசத்தின் முன்னேற்றத்திற்கு அதன் சேவை பெரிதாக இருக்குமாம்!

ஏன் இருக்காது? காமராசரைப்போல தமிழ் உணர்ச்சி அற்ற மரக்கட்டைகள் பதவியிலிருந்தால் இந்த அற்ப மகிழ்ச்சிகூடவா இருக்காது?

காதலுக்குக் கண்ணில்லை

தில்லை வில்லாளன் எம். ஏ

காட்சி--8 ஏ

(அழகாபுரி முழுவதும் அலங்காரம் செய்யப்பட்டிருக்கிறது. திருமணம் முடிந்து, மணமக்களை அரச பல்லக்கிலேற்றி வழி கூட்டி அனுப்புகிருர், மன்னன் மாமனுனர்.)

மாம: அம்மா, பொன்னே, தாயற்ற உன்னை எவ்வளவோ பாடுபட்டு வளர்த்தேன். உன் வாழ்க்கைக் கேற்றவர் என்றே மணமும் முடித்தேன். கண் கலங்காமல், கணவனேடு சென்றுவா. அழகாபுரியும் எனக்குப் பின் உனக்குத்தான். உன் கணவர் புலிவலன் அறநாட்டின் காவலர். பேரரசர்களில் ஒருவர். பூரிப்போடு போய்வாம்மா.

(கண்ணீர் வடித்தபடி பல்லக்கில் ஏறுகிருள். அறநாட்டுக்கு சீரும், சிறப்புகளும் தந்து வழியனுப்பி வைக்கிருன் மாமனுன்.)

○

காட்சி--9

(ஆளவந்தான் தனித்து ஒரு பறையின்மீது அமர்ந்திருக்கிருன்.

அப்போது, ஒரு குதிரைவீரன் வேகமாக வந்து, குதிரையை விட்டு இறங்கி, ஒரு ஓலையைத் தருகிருன்—போய்விடுகிருன்.

ஓலையை வாங்கிப் பிரித்துப் படிக்கிருன். ஆச்சரியத்தால் அவன் முகம் விரிகிறது.)

ஆள: டேய், நகை-பார்த்தாயாடா, விசித்திரமான ஓலை.

(தூரத்திலிருந்து நகைமுகத்தான் ஓடோடி வருகிருன்.)

நகை: சாவோலையாடா?

ஆள:போடா, போ. போக்கற்றவனே – சாவோலையல்ல—என் வரலாறுகூற அழைக்கும் அழைப்பு ஓலை.

நகை:வரலாரு—அட வரண்ட தலையனே—நீ எந்த நாட்டு இளவரசர், உனக்கு, வரலாறு வேறு எழுதியிருக்கிறது!

ஆள:படித்துப் பாரடா ஓலையை—பிறகு சொல்லடா, நமது அடுத்த வேலையை.

(நகைமுகத்தான் ஓலையை வாய் விட்டுப் படிக்கிருன்.

"உடனே புறப்படு — உன் வரலாறு தெரிந்து கொள்ள. உன் தந்தையென்று உன்னை வளர்த்துக் கொண்டிருக்கும் நீலவானத்தான் உன் தந்தையல்ல — வளர்ப்புத் தந்தை. அறநாட்டின் தலைநகர் அறவாழிக்கு நாளையே வா—மன்னர் மண ஊர்வலம் வரும்—நேரம் மாலை மணி ஐந்து—நான் நீல நிற சட்டை யணிந்திருப்பேன்—தங்க ஜரிகை என் தோளிலே மின்னலிடும்–அடையாளம் கண்டு கொள். உம், தாமதிக்காதே. உடனேவா.

இங்ஙனம்,

உன் உண்மைத் தந்தையின் உயிர் நண்பன்"

நகை: விசித்திரமான கடிதம் தான்.

ஆள: இக் கடிதப்படி உடன் புறப்பட்டுப் போய்விட வேண்டியதுதான்.

நகை:உன் தந்தையிடம் என்ன கூறிப் புறப்படுவது?

ஆள:வேலைதேடிப் போகிருேம் என்று கூறி விட்டுக் கிளம்பி விடுவோம்.

நகை: இந்த மாதிரி நேரத்தில் உன் மூளைக்குள்ள சுறுசுறுப்பு என் மூளைக்கு வருவதில்லை.

ஆள: இந்த மாதிரி நேரத்தில் என்ன—எந்த நேரத்தில் வருகிறது?

நகை: இனி என்ருல் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது—ஒரு அடி எடுத்து வைத்தால் உயிர் போய் விடும் — உன் பேச்சைக் கேட்டு, உன் பின்ருல் நான் வந்தேனே!

ஆள:டேய், எழுந்திரு-நொண்டிக் கழுதை மாதிரி சண்டித்தனம் செய்யாதே.

(அப்போது வழியிலே செல்பவன் ஒருவனைப் பார்த்து விசாரிக்கிருன்.)

ஐயா, மன்னர் மண ஊர்வலம் இவ்வழியாக வருமா?

வழிப்போக்கன்: அறவாழி நடு வீதி வழியாக வரும்.

நகை:இந்த ஓலையின்படி போவதாலே உனக்கு இரட்டை இலாபம்—எனக்கு என்ன?

ஆள:என்னடா இரட்டை லாபம்?

நகை:உன் வரலாறும் தெரியும்–அதோடு அழகு ராணி பொன்மேனியாளின் தரிசனமும் கிடைக்கும்.

ஆள: உன் மூளைக்கு, முதல் முதல் இப்போதுதான் சுறுசுறுப்பே வந்திருக்கிறது!

○

காட்சி--10

(அறவாழியின் நடுவீதியொன்றில் ஆளவந்தானும், நகை முகத்தானும் நிற்கின்றனர்.)

ஆள: நடுவீதியைத் தேடிப் போவோம், வாடா.

நகை: சரி.

ஆள: பின் எழுந்திரேன், போவோம்.

நகை: எனக்கொரு சந்தேகம்—அற நாட்டின் தலை நகர் அறவாழி–அறவாழியின் நடு இடம் நடுவீதி—அந்நடு வீதியைக் கண்டு பிடிப்பது எப்படி?

ஆள: கஜக்கோல் கொண்டு வரவில்லையா?

நகை: எதற்கு?

ஆள: உன் மூளையை அளந்து பார்க்க — வாயிலே இருக்கிறது வழி — வாடா மடையா.

நகை: மடையனோடு சேர்ந்திருக்கும்......

ஆள:(சிரித்தபடி) வேண்டாம், இப்போது உன் வேடிக்கை. இதோ, அந்தக் கடிதம். படிக்கிறேன்...அறநாட்டின் தலைநகர் அறவாழிக்கு நாளையே வா. மன்னர் மண ஊர்வலம் வரும். நேரம் மாலை மணி ஐந்து. நான் நீல சட்டையணிந்திருப்பேன். தங்க ஜரிகை என் தோளிலே மின்னலிடும்.

டேய், உடையைப் பார்த்தால், அவன் ஒரு வீரனுகத் தானிருக்க வேண்டும்.

நகை: ஆடையை கண்டு என்ன செய்வது? அவன் உள்ளதைச் சொல்வான் என்பது எப்படித் தெரியும்? உன் உண்மைத் தந்தையைப் பற்றிய விவரங்களை அவன் கூறுவான் என்று நம்புகிருயா?

ஆள: நான் திடமாக, தீர்மானமாக நம்புகிறேன். அழகாபுரியில் அன்று வந்த குதிரை வீரன், 'ஆளவந்தான் நீர் தானே' என்று கேட்டுக் கொண்டே இந்தக் கடிதம் தந்தான். என் பெயரை எப்படி அவன் அறிந்திருக்க முடியும்? அதிலிருந்தே, நான் என்னைப் பற்றிய விவரங்களை அவன் கூறுவான் என்று நம்புகிறேன்.

நகை: நீலவானத்தாரும், உன்னை சிறு குழந்தையாக இருக்கும் பொழுது, நள்ளிரவில் வந்து யாரோ கொடுத்துச் சென்றதாகத்தானே கூறுகிருர்—உன் பெற்ற தந்தையைப் பற்றி உனக்கு எதுவும் தெரியாதல்லவா?

ஆள: தெரியவே தெரியாது.

நகை; அரைகுறையான நினைவுகள் கூடக் கிடையாதா?

ஆள: இல்லையடா இல்லை. தந்தை யறியாத தனயன் நான்.

நகை: அப்படியானுல், தலை தப்பியது!

ஆள: ஏன்?

நகை: ஏனெனில், என் அப்பா என் தலையில் குட்டிக் குட்டி மொட்டைத் தலையாகவே ஆக்கிவிட்டாரே!

ஆள: கேலி பேசாதே நகை—என் மனதிலே பெரிய புயல் வீசிக்கொண்டிருக்கிறது.

நகை: புயல் இனி ஓய்ந்துவிடும். அதோ மணி ஐந்து அடிக்கும் ஓசை கேட்கிறதே!

ஆள: நீல ஆடை—தங்கஜரிகை!

மேள தாளங்கள் முழங்க, மன்னர் மண ஊர்வலம் வருகிறது.

வாண வேடிக்கைகள்—பொம்மலாட்டம் – நாதசுரம்—பலப்பல கேளிக்கைகள்.

இருவரும் ஒதுங்கி நின்று பார்க்கின்றனர்.

மணமகன் மன்னன் பல்லக்கு வருகிறது. அடுத்து

✻ தொடர்ச்சி 6–ம் பக்கம்

நமது சட்ட சபை!

- வருகிற பிப்ரவரி அல்லது மார்ச்சில் சென்னை ராஜ்யத்தில் நடக்கப் போகும் தேர்தல்களில் மொத்தம் 205 எம். எல். ஏ.க்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களில் 6 பேர்கள் சென்னையுடன் இணையப் போகும் தென் திருவாங்கூர் பிரதிநிதிகள்; 30 பேர்கள் ஷெட்யூல்டு வகுப்பினரின் பிரதிநிதிகள். (இப்பொழுது சென்னை அசெம்பிளியில் 230 ஸ்தானங்கள் இருக்கின்றன.)
- சென்னை ராஜ்யம் பார்லிமெண்டுக்கு 41 மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கும். (இவர்களில் ஒருவர் நம்முடன் சேரப் போகும் தென் திருவாங்கூர் பிரதிநிதியாக இருப்பார்.)
- சென்னை அசெம்பிளியின் ஒவ்வொரு தொகுதிக்கும் சராசரி ஒன்றரை லட்சம் வோட்டர்கள் இருப்பார்கள். பார்லிமெண்டரி தொகுதி ஒவ்வொன்றுக்கும் இதைப் போல ஐந்து பங்கு வோட்டர்கள்.
- சென்னை மேல் சபையில் 48 அங்கத்தினர்கள் இருப்பார்கள். இவர்களில் 16 பேர்கள் அசெம்பிளியால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்; 16 பேர்கள் ஸ்தல ஸ்தாபனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்; 4 பேர் பட்டதாரிகளின் பிரதிநிதிகள்; இன்னொரு 4 பேர் உபாத்தியாயர்களின் பிரதிநிதிகள்; பாக்கி 8 பேர்களை கவர்னர் நியமனம் செய்வார்.

நாடகம்

காட்சி: 8

[ஆனைமுஞ்சிப்பிள்ளை வீடு. பிள்ளை, ஒரு சோபாவில் சாய்ந்து கொண்டு, "கண்ணன் காட்டிய வழி" என்ற நூலைப் படித்துக் கொண்டிருக்கிறார். அப்போது அவர் எதிரே கறுப்பன் வந்து நிற்கிறான். அவர் அவனைக் கவனிக்கவில்லை. சற்று நேரம் நின்று கொண்டிருந்து விட்டுக் கறுப்பன் கனைத்துக் காட்டுகிறான். திரும்பிப் பார்த்த ஆனைமுஞ்சிப்பிள்ளை, "யாரது?" என்று கேட்கிறார்.]

கறு: தெரியவில்லையா? தியாகி கறுப்பன்......போன தேர்தலில் உங்களுக்காக ஓடியாடி உழைத்த ஏமாந்த சோணகிரி!...

ஆனை: என்னப்பா வரும்போதே ஒரு மாதிரி வருகிறாயா? ஏதாவது வம்பு வளர்க்க வந்திருக்கிறாயா?

கறு: சே, சே — அதெல்லாம் ஒன்றுமில்லை! மறந்துவிட்டீர்களோ அடியேனை யென்று ஞாபகப் படுத்தினேன். அவ்வளவுதான்!

ஆனை: எப்படியப்பா உங்களையெல்லாம் மறக்க முடியும்?

கறு: அதெப்படி முடியும்—அருகாமையில் வந்து விட்டதே—தேர்தல்!

ஆனை: கறுப்பா! வேலையுள்ள நேரத்திலே மட்டுமல்ல; என்றைக்குமே உன்னுடைய ஞாபகம் எனக்கு இருக்கும்!...தீபாவளிக்குக்கூட உனக்கு ஒரு ஜோடி கதர் வேட்டியும், சட்டையும், பணமும் அனுப்ப வேண்டுமென்று மானேஜரிடம் ஞாபகப் படுத்தியிருக்கிறேன்.

கறு: போன தேர்தலுக்குப் பிறகு இடையிலே நாலு தீபாவளி வந்து போனதாக எனக்கு ஞாபகம்!... அந்தத் தீபாவளிக்கெல்லாம் இல்லாத வேட்டி சட்டை வெகுமதிகள் இந்தத் தீபாவளிக்கு மட்டும் ஏனோ தெரியவில்லை. தயவுசெய்து அப்படியெல்லாம் ஒன்றும் அனுப்பாதீர்கள்!

ஆனை: சீ சீ! தீபாவளிப் பரிசை வேண்டாமென்று சொல்லாதே!

கறு: தீபாவளியையே வேண்டாமென்கிறார்கள்...

ஆனை: ஓகோ—அந்தத் திராவிடக் கட்சி வாடை உனக்கும் அடிக்குதோ?

கறு: திராவிடக் கட்சி தீபாவளி வேண்டாமென்பது அறிவியல் அடிப்படையில்!...இன்னொரு சாரார் இருக்கிறார்கள்; தீபாவளியே வேண்டாமென்று வெறுப்பவர்கள்!

ஆனை: யாரைச் சொல்லுகிறாய்?

கறு: உங்களைப் போன்ற பணக்கார வீடுகளில் அடிமைகளாய் உழைத்து உருக் குலைந்து சோற்றுக்கில்லாமல் தவிக்கும் பஞ்சைகள் — இந்த சர்க்காரில் வேலையில்லாமல் துடிக்கும் பராரிகள்— வேலையிருந்தாலும் சரியான கூலியில்லாமல் வாடும் பட்டினிகள்— இவர்களுக்கெல்லாம் தீபாவளி வருவது தித்திப்பான சேதியா?

ஆனை: ஏசேது! உன்மேல திராவிட வாடையும் வீசுது! கம்யூனிஸ்ட்டு வாடையும் வீசுது!

கறு: இதோ என் வாயை முகர்ந்து பாருங்கள்; காங்கிரஸ் வாடையும் கண்டிப்பாக வீசும்!......(வாயை அவர் முகத்துக் கெதிரே ஊதுகிறான்..........ஆனைமுஞ்சிப்பிள்ளை முகத்தை சுளித்துக் கொள்கிறார்.)

ஆனை: டேய்...என்னடா இது: பட்டை சாராயவாடை!...

கறு: என்ன செய்றது—எங்களைப்போல ஆளுங்கெல்லாம் விஸ்கியும் ஒயினுமா கிடைக்கும்! போன எலக்ஷனிலே நம்பவீட்டே சாராயக் கடை மாதிரிதானே இருந்தது—தெருவிலே போகிற போலீஸ்காரர்கள் எல்லாம் மூக்கைப் பிடித்துக் கொண்டுதானே போனார்கள்!........அந்தத் திருவிழாவுக்கே நடுநாயகமாக விளங்கினீர்கள்; இப்போது முகத்தைச் சுளிக்கிறீர்களே!

ஆனை: ம்!......வர வர உன் மாதிரி ஆளுங்கெல்லாம் மரியாதை தெரியாமபோய் விட்டது!

கறு: யாருக்கு மரியாதை தெரியாமல் போய் விட்டது—நான் வந்து இவ்வளவு நேரம் ஆகிறது; உட்கார் என்று ஒரு வார்த்தை சொல்ல உமது நாக்கு அசைய மாட்டேன் என்கிறது! நீர் சொல்கிறீர் எனக்கு மரியாதை தெரியவில்லை என்று!

[கூறிக்கொண்டே அங்குள்ள மேசையின் மீது உட்காருகிறான். ஆனைமுஞ்சிப்பிள்ளை, சிறிது திகிலுடன் அவனை அண்ணாந்து பார்த்துக் கொண்டே...]

ஆனை: ஏய்...ஏய்...என்னது? ராவணன் தர்பாரிலே அனுமார் உட்கார்ந்தது மாதிரி உட்கார்ந்து கிட்டே!...

கறு: ஹி ஹி ஹி!......பொது ஜனங்கள் அபிப்பிராயம் கேட்போமா?.........யார் அனுமாரு, யார் ராவணன்னு!...

ஆனை: கறுப்பா!...நிதானமில்லாம இருக்கிறே நீ!...... வீணா வம்பு வளர்க்காம வீட்டுக்குப் போய்ச் சேரு!...

கறு: வீடா...? அது எங்கே யிருக்கு எனக்கு?......வீடுதான் போன தடவை புயல் அடிச்ச போது காற்றோட போய் விட்டதே!

ஆனை: அப்படியா?... ...வீடு புயல்ல போய்ட்டதா?... எனக்குத் தெரியாதே!...

கறு: புயல் அடிச்சது தெரியுமா; தெரியாதா?

ஆனை: அது தெரியும்!

கறு: ஒருவேளை ஐவகர்லால் நேரு மாதிரி உமக்கும் புயல் அடிச்ச விஷயம் தெரியாமல் போனதோ என்று நினைத்தேன்.

ஆனை: ஏய்.....அவரைப்பத்தியெல்லாம் இப்ப ஏன் பேசுறே!......அவரைப்பத்திப் பேச நமக்கு என்ன யோக்யதை இருக்கிறது!

கறு: நமக்கு யோக்யதையில்லாமல் போனதால்தான் அவரைப் பற்றிப் பேச வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. உலகத்தின் முன்னே நம் நாட்டுக்கு சரியான யோக்யதையிருந்தால் அவரைப் பற்றி ஏன் பேசுகிறோம்!...

ஆனை: உலகத்திலே நம்ப தேசத்துக்கு என்னடா யோக்யதை இல்லை? நேரு சென்ற இடமெல்லாம் சிறப்பு!...

கறு: நம்ப தமிழன் பம்பாயிலே தைக்கிறான், செருப்பு!

ஆனை: வக்கனை பேசாதே!... நேருதான் உலகத்திலே சமாதானத் தூதுவர்!

கறு: உண்மை!...ஆனால் பஞ்சாயத்துக்காரர் வீட்டிலே 'பாரதப் போர்' நடந்து கொண்டேயிருக்கிறது!... உலக நாடுகளுக்கு எல்லை வகுக்கப் போகிறார்—தமிழ் நாட்டு எல்லை வகுக்க மறுக்கிறார். சூயஸ் எகிப்துக்குத்தான் சொந்தமென்று குரல் கொடுக்கிறார் — தேவிகுளம், பீர்மேடு, திருத்தணி முதலியவை யாருக்குச் சொந்தமென்று நிர்ணயிக்க முடியாமல் நீதி தவறுகிறார்! அயல் நாட்டுப் புயலை அடக்க ஓடுகிறார்—சொந்த நாட்டில் சூறாவளி வீசி, சோகம் கப்பிக்கொண்ட நேரத்திலே மலையாளக் கரையிலே உல்லாசப் பிரயாணம் செய்கிறார்.

ஆனை: பொய்! பொய்! அவர் எத்தனையோ வெள்ளச் சேதங்களை நேரிலே போய் பார்த்திருக்கிறார்.

கறு: ஆமாம் — அதெல்லாம் வட நாட்டில்!...இங்கே தஞ்சையும் திருச்சியும்

விற்பனையாகிறது!
ரங்கோன் ராதா
திரைக் கதை வசனப் புத்தகம்
விலை 8 அணா :: கழிவு 40 சதவிகிதம்
★ தேவையானோர் கழிவு நீக்கி முன் பணம் அனுப்புக.
★ அல்லது தேவையான பிரதிகளைத் தெரிவித்தால் வி. பி. யில் அனுப்புகிறோம்.
மூறு காறு பதிப்பகம், சென்னை-6.

மதுரையும் ராமநாதபுரமும் தண்ணீருக்குள் மூழ்கியிருந்தபோது நேருவின் தரிசனம் யாருக்கும் கிடைக்கவில்லை!...

ஆனை: சரிதான்! சரிதான்!... காங்கிரசுக்குள்ளே "பெரியார்"கள் பலர் முளைத்து விட்டார்கள்!

கறு: ......பெரியார்தான் காங்கிரசையே ஒத்துக்கொள்ள ஆரம்பித்து விட்டாரே; அதனைல் திருத்திக்கொள்ளுங்கள் தயவு செய்து! காங்கிரசுக்குள்ளேயே பல 'சங்கரலிங்கங்'கள்தான் முளைத்துவிட்டார்கள்!...

ஆனை: சங்கரலிங்கங்கள் முளைத்தால் என்ன? சாப்பிடாமல் இருந்து சாக வேண்டியதுதான்!

கறு: பிள்ளைவாள்!......முன்பெல்லாம் தியாகிகளின் பிணம், காங்கிரஸ் கட்சிக்கு எருவாக இருந்தது! ஆனல் இப்போது விழும் தியாகிகளின் பிணம், காங்கிரஸ் தருவைவெட்டி வீழ்த்தும் சக்தி வாய்ந்தது என்பதை மறந்து விடாதீர்கள்!

ஆனை: நீ என்னப்பா; என்னமோ நேருகிட்டேயும் காமராசர் கிட்டேயும் பேசுவதுபோல எனக்கிட்ட பேசுறே?

கறு: உங்களைப் போன்ற பணக்காரர்கள் இல்லாவிட்டால் நேரு ஏது? காமராசர்தான் ஏது? காங்கிரசின் மூலவர்கள் இப்போது நம்பி வாழ்வதெல்லாம் உங்களைப் போன்ற தங்கத் தூண்களைத் தானே!

ஆனை: பிறகென்ன; உங்களைப் போன்ற திருவோடுகளை நம்பினல் தேசம் உருப்பட்டு விடுமாக்கும்!

கறு: 'திருவோடு'களின் சக்தி உமக்குத் தெரியாது! இந்த நாட்டில் அந்த சக்தி இதுவரையில் வெளிப்படுத்தப்படவில்லை. திருவோடுகள் ஒன்று சேர்ந்து கிளம்பிவிட்டால் பிறகு தெரியும் சேதி!

ஆனை: சரி சரி!......உன்னேடு என்ன இதெல்லாம் பேச்சு வேண்டியிருக்கிறது. வந்த விஷயத்தைச் சொல்!...

கறு: அடடா...அதை மறந்துவிட்டு இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருக்கிறேனே; உங்களிடம் ஒரு முக்கியமான விஷயமாக வந்தேன்.

ஆனை: பணம் வேணுமா?

கறு: எனக்கு ஏன் பணம்?... நான் வந்த காரியம் வேற! சமயோஜிதம் பிள்ளையின் மகள் கண்ணம்மாவை நீர் திருமணம் செய்துகொள்ளப்போவதாகக் கேள்விப்பட்டேன்.

ஆனை: ஆமாம்; அதற்கென்ன?

கறு: கண்ணம்மாவுக்கு உம்மை மணந்து கொள்ள இஷ்டமில்லையென்றும் கேள்விப்பட்டேன்.

ஆனை: யார் சொன்னது?...... அவளுடைய அப்பன் சம்மதம் கொடுத்துவிட்டான்!...

கறு: அப்பா சம்மதித்தால் போதுமா?......

ஆனை: ஏன் போதாது?...

கறு: தந்தைக் கழகம் காங்கிரசில் சேர்ந்துவிட்டது என்பதற்காக, மகன் கழகம் தி. மு. க. வும் காங்கிரசில் சேர சம்மதிக்க வேண்டுமென்று கட்டாயமா; என்ன?

ஆனை: கறுப்பா! இதெல்லாம் உனக்கு சம்பந்தமில்லாத விஷயம்—நீ தலையிடாதே இதில்!

கறு: சம்பந்தம் நிறைய இருக்கிறது; கண்ணம்மாவை நீர் திருமணம் செய்து கொள்ள நான் விடமாட்டேன். வீணுக ஒரு பெண்ணின் வாழ்வைக் கெடுக்காதீர்!

ஆனை: மரியாதையாகப் போய் விடு உடனே!...

கறு: முடியாது!...நீர் கண்ணம்மாவைக் கல்யாணம் செய்து கொள்வதில்லையென்று உறுதி அளிக்க வேண்டும்—அப்போதுதான் போவேன்! நன்ருக சிந்தித்துப் பாரும். கண்ணம்மாவின் அழகுக்கு நீர் பொருத்தமானவர்தானு? குளிர் நிலவு எங்கே? கொடூர உருவம் எங்கே?... நீர் குப்பை! அவள் குண்டுமணி!......நீர் பித்தளை! அவள் வைரம்!...நீர் காங்கிரஸ்! அவள் காந்தி!...... ஒன்றுக்கொன்று ஒவ்வாது!......தயவு செய்து அந்தத் தங்க மேனியாளை மறந்து விடும்!...

ஆனை: நீ யாரடா என்னைக் கேட்க?...

[என்றபடி கறுப்பனை ஓங்கி அறைகிருர்...அதற்குள் ஆனைமூஞ்சியின் காவற்காரன் ஓடி வந்து அவனும் கறுப்பனை அடிக்கிருன். ஆத்திரங்கொண்ட கறுப்பன், ஆனைமூஞ்சிப் பிள்ளையின் தலையில் அங்குள்ள பூ ஜாடியால் அடித்துவிடுகிருன். ஆனைமூஞ்சிப் பிள்ளை மயக்கமடைகிருர். உடனே காவற்காரன் கத்துகிருன். ஆட்கள் ஓடிவருகிருர்கள். கறுப்பன் ஓடுகிருன். ஆட்கள் துரத்துகிருர்கள், அவனைப் பிடிக்க!...]

—திரை விழுகிறது—

—(தொடரும்)

நவம்பர் 10-ம் தேதியன்று

கிடைக்கும்!

முத்தாரம்

★ எல்லோரும் எழுதுகின்றனர்!

★ எல்லாச் சிறப்புகளும் இருக்கின்றன!

இன்றே உங்கள் பிரதிக்கு விற்பனையாளரிடம் சொல்லி வையுங்கள்.

"என்னைப் பற்றி..."

மு. கருணநிதி எழுதும்

தொடர் கட்டுரை

"வெள்ளி வீதி"

நவம்பர் 20-ம் தேதி இதழில்

ஆரம்பமாகிறது!

மகிழ்கிறேம்

அருமை நண்பர் இராம. அரங்கண்ணல் அவர்களின் துணைவியார் சென்ற 24—10—56 அன்று ஒரு ஆண் மகவுக்குத் தாயானுர்கள். தாயும் சேயும் நலம். செய்தி அறிந்து மிகவும் மகிழ்கிறேம்.

ஐந்து ரூபாய்...

❋ முதல் பக்கத் தொடர்ச்சி

மும் கிடைக்கிறது என்பார்கள்!

அதே நெருக்கடியான நிலைமை ஏற்பட்டதால்தான் இந்த மாநிலத்து என். ஜி. ஓ.க்களும் அமைதியான போராட்டத்துக்குத் தங்களைத் தயார் செய்து கொண்டு விட்டனர்!

ஆமாம்; நியாயமான கோரிக்கைக்கு உடனடியாகச் சம்மதம் தந்தது என்னும் புகழ் மொழியை தேடிக் கொள்ள விரும்புவதே இல்லை, இந்தக் காங்கிரஸ் அரசாங்கம்!

அருமை என். ஜி. ஓ. க்களே! முப்பத்தாறு ஆண்டுகள் இடைவிடாமல் இந்த இறுமாப்பு மிக்கோரது ஆட்சியுடன் போராடினீர்கள்! இறுதியில் உங்களுக்கு ஐந்தே ரூபாய்தான் கிடைத்திருக்கிறது!

இப்போது நீங்கள் பெற்றிடும் ஊதியம் இன்னும் மத்திய அரசாங்க ஊழியர்கள் பெறும் ஊதியத்தை விடக் குறைவானதுதான்!

5—ரூபாய்தான் உயர்ந்திருக்கிறது, கடந்த முப்பத்தாறு ஆண்டுபோராட்டத்தின் விளைவாக!

இதைக் காட்டியே உங்கள் வாயை அடைக்கப் பார்க்கிருர்கள் ஆட்சியாளர்கள்!

இதற்கெல்லாம் கட்டுப்படக் கூடியதல்லவே உங்கள் போராட்டம்!

அதனுல்தான் அன்புள்ள என். ஜி ஓ.க்களே! மத்திய அரசாங்க ஊழியர் பெறும் சம்பளம் அளவு நீங்களும் பெறும் வரைக்கும் ஓயமாட்டோம்—என்கிற உங்கள் உரிமைக் குரலை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது!

அதனுல்தான் துவளாமல் தொடர்ந்து நடை பெறட்டும் உங்கள் போராட்டம்—என்று வாழ்த்துகிறேம்! ●

சர்க்கார் உத்தியோகத்திலிருந்து விலகி வந்த இயக்கத் தோழர் இரே. இளம்வழுதி எம்.ஏ. பி.எல். அவர்கள் 19—10—56-லிருந்து தனியாக கடலூரில் கீழ்க்கண்ட முகவரியில் வக்கீல் தொழில் நடத்தி வருகிருர்கள்.

இரே. இளம்வழுதி எம் ஏ.பி.எல்.
கான்வென்ட் தெரு.
புதுப்பாளையம், கடலூர்.

கழகத் தோழர்களுக்கு வெற்றி

காந்தியார் சிலை வைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடி ஏற்றக்கூடாது என்று, சேலம்—அம்மாப்பேட்டைக் கழகத் தோழர்களை, அந்த வட்ட தேசிய வாலிபர் சங்கத்தவர் தடுத்து வந்தனர்; அதை ஒட்டி எழுந்த தகராறு, உயர் நீதிமன்றம்வரை சென்று, நேற்று வழக்கில் கழகத் தோழர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

''நகரசபை, அந்த மண்டபத்தை தேசிய வாலிபர் சங்கத்தவருக்கு விலைக்கோ அல்லது அன்பளிப்பாகவோ தந்திருந்தாலன்றி, மண்டபம் கட்டுவதற்கு அந்தச் சங்கத்தவர் பங்குத் தொகை தந்தார்கள் என்பதினாலேயே, அவர்களுக்கே உரியதாக ஆகிவிட முடியாது.

''இந்த மண்டபத்தில் கொடி ஏற்றுவதற்காகவே இரு கட்சிக்காரர்களுக்கு மிடையில் தகராறு.

''அப்படிச் செய்வதற்குரிய உரிமை நகர சபைக்கே உண்டு. நகரசபையின் அனுமதியின்றி அங்கு எவரும் கொடி ஏற்ற முடியாது. நகர சபையின் அனுமதியின்றிக் கொடி ஏற்றிக் கொள்ள எந்த ஒரு கட்சிக்கும் தனி உரிமை கிடையாது. எனவே, கீழ் நீதி மன்றத் தீர்ப்பை ஒதுக்கி வைக்கிறேன்''

என்று, நீதிபதி கனம் சோமசுந்தரம் அவர்கள் தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

காதலுக்கு...

✽ 5-ம் பக்கத் தொடர்ச்சி

மணமகள் பொன்மேனியாள் பல்லக்கு வருகிறது. திரையை விலக்கிப் பார்க்கிறாள். ஆளவந்தான் அவளையே பார்க்கிறான். அவளும் அவனையே பார்க்கிறாள். பல்லக்கு வெகு தூரம் செல்லும் வரை பார்க்கின்றனர்.

நகை, நீல ஆடை மனிதரைப் பார்த்தவுடன், ஆளவந்தானைப் பார்க்கிறான். அவன் அசைவற்று நிற்பதைப் பார்த்துத் தட்டுகிறான். திடுக்கிட்டுத் தன்னுணர்வு கொள்ளுகிறான்.

அப்போது பிரபுக்கள் பலர் போய்க் கொண்டிருக்கின்றனர்.)

நகை : ஆளவந்தா, நாம் தேடுவது நீல ஆடை, தங்க ஜரிகை-நீள்விழி புன் முறுவலல்ல!

ஆள :நீல ஆடைக்காரர் யாரேனும் பார்த்தாயா ?

(குறிப்பிட்ட அடையாளத்தோடு ஒரு பிரபு போகிறான். அவனைத் தொடர்ந்து இருவரும் செல்கின்றனர். ஊர்வலம் சென்று விடுகிறது. மூவரும் தனித்து நிற்கின்றனர்.)

ஆள :நீங்கள் தானே.........

பழிதீர்த்தான்: ஆளவந்தா, குறிப்பிட்டபடி, தவறாது வந்து விட்டாய்—இனி உன் வாழ்வில் ரசம் தவழும்!

ஆள : என் தந்தை இருக்கிறாரா ?

பழி : ஏன் இல்லை, இதோ உன் உருவில். இருக்கிறார்! உன் உடை, நடை, உருவம், வார்த்தை உதிர்க்கும் பாவம் — எல்லாம் அவர் போலவே இருக்கிறதே! அவரது தங்கக் குணமும் உன்னிடம் தங்கியிருக்கும் என்றே எண்ணுகிறேன்.

ஆள : என் தந்தை பற்றித் தவக்கமின்றிக் கூறுங்கள். அந்தச் சேதி கேட்ட பிறகு என் ஆவித் துடிப்பு நின்றாலும் பரவாயில்லை.

பழி : தம்பி, என்னை உன் அண்ணனாகவே ஏற்றுக் கொள். நடக்க இருப்பவைகளில், நான் உன் நிழல் போலவே இருப்பேன் தம்பி.

ஆள : சரி, அண்ணா.

பழி : தம்பி, இவன் யார் ?

ஆள : ஆருயிர்த்தோழன் நகை முகத்தான்.

பழி : நாம் இனி தனித்திருக்க வேண்டும்.

ஆள : அவனும் என் தம்பி போல — அன்பின் பிணைப்பாலே என் பின்னே வந்திருக்கிறான்—அவன் அறியா இரகசியம் என் வாழ்வில் எதுவும் இல்லை.

பழி: உன்னையும், என்னையும் தவிர, வேறு எவரும் அறியாத இரகசியம் இருக்கிறது. அவனைப் போகச் சொல்லி விட்டு வா, தம்பி.

(நகைமுகத்தான், இதுவரை தனித்து நிற்கிறான்.)

ஆள: நகை, ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஒரு மணி நேரத்தில் வந்துவிடு. இந்த அறுபது நிமிடப் பிரிவால், நம் அன்புக் கண்ணாடியில் அழுக்கேறிவிடாது.

நகை: (மெதுவாக) ஆளவந்தா, அவனோடு பேசாதே—நெருங்காதே—அவன் கண்களைப் பாரேன்—வஞ்சகம் வழிந்தோடுகிறது — அவன் ஒரு பயங்கர மனிதன் என்றே படுகிறது.

ஆள: (சிரித்தபடி) கவலை வேண்டாம்-விழிப்போடிருப்பேன்—வேகமாகப் போ.

(நகை முகத்தான் செல்கிறான். ஆளவந்தான், பழி தீர்த்தானுடன் போகிறான்.)

O

காட்சி-11

[பழிதீர்த்தானும், ஆளவந்தானும் நின்றபடி பேசுகின்றனர்.]

ஆள : அண்ணா, இப்போது சொல், என் அன்புத் தந்தையைப் பற்றி! அவர் புரவிமீதமர்ந்து சென்றால் கண்டோர் வியந்திடும் காட்சியாகத்தானே இருக்கும்—அப்படித்தான் நான்கனவு காண்கிறேன். அந்தக் குதிரை வீரர் குரல் சிங்க முழக்கமாகத்தானே இருக்கும்—அப்படித்தான் என் செவிகளில் ஒலிக்கிறது. அவர் தனித்து குதிரையில் செல்வாரா? படைகள் புடை சூழ வருவாரா ? என் உடம்பிலோடும் இரத்தம் — அந்த இரத்தம் ஓட வழி காட்டும் நரம்புகள் எல்லாம் என்னை மன்னர் மரபு வந்தவனாக நினைக்கச் சொல்லுகிறது — சொல் அண்ணா சொல், என் தந்தை மன்னரா ?

பழி : தம்பி, முதலில் என்னைப் பற்றித் தெரிந்து கொள். என்னைப் பரம்பரைப் பணம் படைத்த பழி தீர்த்தான் என்று கூறுவர் இந்நாட்டில். பக்கத்து பதுங்கு மலையில் உள்ள கோட்டை எனக்குச் சொந்தம். கொஞ்சம் நிலம் உண்டு. தோட்டம் துறவு உண்டு. எடு பிடி ஆட்களும் உண்டு. நான் பதுங்கு மலை சிற்றரசன். சுருங்கச் சொன்னால், அறநாட்டரசன் கீழ்தான் உள்ளேன். இவைகளுக்கு மேலாக உன் தந்தையின் நண்பன்—நண்பன்என்பதைவிட ஒரு மகன் என்பேன்.

ஆள : என்னைப் பற்றி, என் தந்தையைப் பற்றி எல்லா விபரங்களையும் ஒரே கணத்தில் கூறி விடு அண்ணா, ஆவலால் என் இதய ஓட்டமே நின்றுவிடும் போலிருக்கிறது!

பழி : தம்பி, அவசரப்படாமல் கேள்—அறநாட்டின் மன்னன் வெள்ளை மனத்தான். மனிதரிலே மாணிக்கம், மன்னர் மன்னன், மனித குலத்தை வாழ்விக்க வந்த புனிதர் என்று நாடே பேசிற்று. அவர் ஆட்சி, இந்த மாநிலத்தில் இல்லாத இடமில்லை. எங்கும் அவர் கொடி பறந்தது. அவர் புகழ் பேசப் பட்டது. ஆயிரக் கணக்கான சிற்றரசர்கள் காணிக்கை செலுத்தினர். அவர் நா, இந்நாநிலத்தின் சட்டசபை—அவர் விரல் அசைவு இந்நாட்டின் சட்டங்கள்! அந்த உத்தமரை வெள்ளை மனம் படைத்த வேந்தரை, வீழ்த்திட சதி செய்தான் ஒரு கபடன்—அவனுக்கு அப்போது இருந்த பதவி, மந்திரி. அந்த வஞ்சகன் ஓர் நாள் நள்ளிரவில், கள்ள மனத்தவர் துணையோடு. ...

முன் நிகழ்ச்சிக் காட்சி

[மன்னன் வெள்ளை மனத்தான் தங்கக் கட்டிலிலே நிம்மதியாகத் தூங்குகிறான்—அவன் முகத்தைச் சுற்றி வாள் முனைகள்—விழித்துக் கொள்கிறான்.]

வெள்ளை மனத்தான் : நள்ளிரவிலே என்னை வளைத்துக் கொண்ட கள்ளர்களே, உங்களுக்கு நான் செய்த தீங்கென்ன ?

[முகத்தை மறைத்திருந்த துணியை எடுத்து விட்டு மந்திரி பேசுகிறான்.]

மந்திரி : நீர் செய்த தீங்கு-உம் தலையில் தாங்கி யிருக்கும் முடிதான்.

வெ : என்ன, நீயா—என் கண்களை நம்ப முடியவில்லையே!

மந்திரி: நம்ப முடியவில்லையா! மன்னாதி மன்னா-நம்ப வைக்கிறன்! காட்டுக் குணத்தாரே! இன்றிரவே, இவனை உங்கள் பாழ் மண்டபத்திற்கு இழுத்துச் செல்லும், அங்கு இவன் தலையைத் துண்டித்து, அதற்கு காகித முடிதயாரித்து தருபவனுக்கு ஆயிரம் பொன் பரிசு என அறிவித்துவிடும்.

[மன்னனை வாள் வீரர்கள் இழுத்துச் செல்கின்றனர்.]

✽

[புழுதி படரும் வீதி வழியே, கந்தலாடையோடு மன்னனை இழுத்துச் செல்லுகின்றனர்.

தடுக்கி விழும்பொழுதெல்லாம் அடித்துத் துன்புறுத்துகின்றனர்.]

✽

[சிறைக்கதவு திறக்கப்பட்டு, உள்ளே மன்னனைத் தள்ளிப் பூட்டி விட்டுப் போகின்றனர்.

முகத்தை மறைத்தபடி ஒருவன் வருகிறான். அவன் பழி தீர்த்தானே.]

காவலாளி: யாரது ?

பழிதீர்த்தான்: சிறையைக் காப்பதற்கு காட்டுக் குணத்தார் ஆட்சியில் என்ன தருகிறார்கள் ?

கா: அட, சுங்க வரிக்காரர் மாதிரி யல்லவா, கேட்கிறாரு — ஆளைப்பாரு — தர்றாங்க பவுன் — என்ன அதுக்கு இப்போ.

பழி: எவ்வளவு ?

கா: பதினைந்துன்னு சொல்லித் தானாகணுமா?-சொல்ல முடியாது!

பழி: ஒரு மாதத்திற்குத் தானே!

கா: ஏன், என் ஆயுளுக்கே என்பே போலிருக்கு!

பழி: சிறையைக் காக்காமல் இருப்பதற்கு, பொன் உண்டா ?

கா: பொன்னா, தலைபோயிடும்!

பழி: இதோ பார், ஆயிரம் பொன், அரைக்கணம், இந்தச் சிறையில் கிடக்கும் ஒரு கைதியோடு பேச வேண்டும் —உம், என்ன சொல்கிறாய் ?

(தொடரும்)

எதிர்க்கிறேம்; எதிர்க்கிறேம்!

வெள்ளையன் தனது ஆங்கில மொழியைத் திணித்தான்!

அதைப் படித்தால்தான் அரசாங்கத்தில் பணிகள் கிடைக்கு மென்று வரம்பு கட்டினன்!

பிறகு ஆங்கிலம் இந்தியாவின் அரசாங்க மொழியாயிற்று! அதுவே அவனை இந்த உப கண்டத்தோடு பிணைத்து வைக்கும் அருமையான தொடர்பாகவும் மாறிவிட்டது!

இதுபோலத்தான் வரலாற்றிலே தோன்றிய எல்லா ஏகாதிபத்திய வாதிகளும் தங்கள் ஆதிக்க வலையைப் பின்னுகின்றனர்!

அதே பாடத்தைப் படித்து விட்டு அணுவுக்கு அணு அதையே அமுலாக்கிக் காட்டுகின்றனர் இந்த ஏகபாரத ஏகாதிபத்திய வாதிகள்!

பள்ளிகளிலே இந்தி மொழி நுழைய முயற்சி நடைபெற்றது!

கட்டாயம் என்ற பெயரிலே இதன் வாழ்வுக்கு எதிர்ப்பு எட்டு திசையிலிருந்தும் அரும்பியதும் விருப்பப் பாடம் என்ற மாறு வேடத்திலே இடம் பிடித்தது!

புகை வண்டி நிலையங்களிலே; தபால் அலுவலகங்களிலே இந்திக்கு முதலிடம்!

அஞ்சற் தலைகளிலே அதற்கே குடியிருப்பு!

பின்னர் இந்தி படித்தவர்களுக்கே உத்தியோக விஷயங்களில் தனிச் சலுகை என்ற நப்பாசை காட்டப்பட்டது!

—இவ்வாறு படிப்படியாக இந்த உப கண்டத்தைச் சுற்றி வளைக்கத் திட்டமிட்டு விட்டது வட நாட்டு ஆட்சி பீடம்!

மொழித்துறையில் மட்டுமல்ல; எங்கெங்கெல்லாம் வழி வகைகள் இருக்கின்றனவோ அங்கிருந்தெல்லாம் ஆதிபத்தியக் கரங்கள் ஆக்கிரமிப்பு நோக்குடன் நீட்டப்பட்டன!

அடுத்து நயா பைசா — புதிய நாணயச் செலாவணித் திட்டம்!

அதிலும் அப்படித்தான்! நாணயங்களின் நாமங்களில்கூட இந்தியே ஆதிக்கம் செலுத்தியது!

இப்போது இன்னுமொரு நயவஞ்சகத் திட்டத்தைப் பிறப்பித்திருக்கின்றனர், ஆதிக்கம் செலுத்துவதிலேயே நாட்டம் கொண்ட பேராசைக் காரர்கள்!

- அதன்படி இந்திய உபகண்டம் முழுவதற்கும் ஒரே காலண்டர் முறை அமுலிலிருக்க வேண்டுமாம்!
- இந்தப் புதிய காலண்டருக்கு 'சகா சகாப்தம்' என்று பெயராம்!
- இந்தப்புது சகாப்தம் இன்னும் ஐந்து மாதங்கள் கழித்து நடைமுறைக்கு வருமாம்!
- இதுகுறித்து நாடெங்கும் பிரச்சாரம் செய்வதற்கு வேறொரு திட்டமொன்று தயாராகிறதாம்!

—இப்படி ஒரு செய்தி வந்திருக்கிறது, இப்போது!

வெள்ளையன் பிரித்து ஆண்டான்; வடநாட்டுக் கொள்ளையன் சேர்த்து ஆளப்பார்க்கிறன்—என்று நரம் பலமுறை சுட்டிக் காட்டியிருக்கிறேம்!

அதற்கு மீண்டுமொரு எடுத்துக் காட்டைப் போல இந்தியா முழுமைக்கும் ஒரு காலண்டர் முறையைத் திணிக்கப் போகிறர்கள்!

—இவைகளை யெல்லாம் கட்டாயமான முறையில்; பொது மக்களின் விருப்பத்திற்கு ஒத்துவராத வகையில் செய்து முடித்துவிட்டு. "பாரீர்! பாரீர்! இமயமுதல் குமரி வரை பாரதத்தில் ஒரே பண்பாடு நிலவுகிறது'"—என்று மார்தட்டிக் கூறிக்கொள்ளப் போகிறர்கள்!

சகா சகாப்தமாம்; புதுமையானதாம்—கூறுகிறர்கள் இப்படி.

அப்படி அதில் என்ன புதுமை இருக்கிறது?

இப்போது அகில உலகமெங்கும் வழங்கி வரும் காலண்டர் முறையை 'கிரிகாரி காலண்டர்' என்று அழைக்கிறர்கள்!

இதிலே ஆண்டொன்றுக்கு 365 நாட்களும், லீப் ஆண்டிற்கு 366 நாட்களும் உண்டு!

இப்போது இந்திய அரசாங்கம் வற்புறுத்துகின்ற சகா சகாப்தம் என்கிற புதிய நாமம் பூண்டிருக்கிற காலண்டரிலும் அப்படித்தான்; சாதாரண வருஷத்திற்கு 365 நாட்கள்! லீப் வருஷத்திற்கு 366 நாட்கள்!

ஆனல் ஒரு மாற்றம்!

மாதங்களின் பெயர்கள் மறு உருக் கொள்கின்றன!

சைத்ரம்
வைசாகம்
ஜேஷ்டா
ஆஷாட
சரவண
பாத்நா
அச்வின
கார்த்திகா
மார்க்சிர
பைஷ
மாக
பல் குன

—அழகுத் தமிழ்ப் பெயர்களைச் சொல்லிச் சொல்லிப் பழக்கப்பட்ட நாமெல்லாம் இந்த விகாரப் பெயர்களை உச்சரிக்க வேண்டும், இனிமேல்!

அரசாங்கத்தின் 'கெசட்டு'கள்; ரேடியோச் செய்தி அறிக்கைகள்; 'ஆடிட் ரிப்போர்ட்டு'கள்-இவையனைத்திலும் இனிமேல் இந்தப் பெயர்கள்தான் இடம் பெறப் போகின்றனவாம்!

ஊர்களின் பெயர் மாற்றத்திலே என்ன இருக்கிறது என்று கேலி பேசியவர்கள் இப்போது மாதங்களின் பெயரை மாற்றுகிறர்கள்!

'சென்னைக்குத் தமிழகம் என்று பெயரிடுவதா? அது கூடாது! மதராஸ் என்பது உலகம் தெரிந்த பெயராயிற்றே; அதை மாற்றலாமா?' என்று ஊளையிட்டவர்கள் இப்போது தொன்று தொட்டு வழங்கி வந்த திங்களின் பெயரையே திருத்துகிறர்கள்!

அநியாயம்! அக்கிரமம் கொடுமை! கொடுமை! கொடுமை!" என்றுதான் கூச்சலிடத் தோன்றுகிறது இந்தக் கோணல் ஆட்சிக்காரர்களின் போக்கினை கவனிக்கும்போது!

ரயில் நிறுத்தப் போராட்டங்கள் ஏதும் நடைபெறவில்லை,

சங்கரலிங்கனர்கள் உண்ணு விரதம் இருக்கவில்லை.

—இருந்தும் பெயர் மாற்றம் வெகு துரிதமாக நடைபெறுகிறது!

நடக்கட்டும்: நடக்கட்டும்! அணையப்போகும் தீபம் சுடர் விட்டுப் பிரகாசிக்குமாம்!

கீழே விழப்போகும் நட்சத்திரம் அதிக ஒளி காட்டிப் பளிச்சிடும்!

அதே போலத்தான் சற்றேறக்குறைய...

அதே போலத்தான் சற்றேனின்று காயப்போகும் வடநாட்டு ஏகாதிபத்தியம் மடிவதற்குள் மார் தட்டிப் பாய்கிறது!

மாதங்களின் பெயரை மட்டும்; இதர பிராந்திய மொழிகளையே மாற்றி அமைக்கட்டும்!

இந்தி அல்லாத இதரமொழிகளை வாய் திறந்து பேசுவோரையெல்லாம் சிறையிலே தள்ளிப் பூட்டட்டும்!

அப்போதாவது இந்த நாட்டு மக்களுக்கு தன்னுணர்வு வராதா? இந்தத் தகுதி கெட்டவர்களின் தகாப்போக்கு தெற்றெனப் புரியாதா? ●

தேர்தல் நிதி தாரீர்!

★

கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! பொது மக்களே! பொதுத் தேர்தல் நெருங்குகிறது! மிக விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கிறது! பொதுத் தேர்தலில் ஈடுபடுதலாகிய மக்களாட்சி முறைமையைத் தூய உள்ளத்தோடும், நேரிய செயல் முறையோடும் நிறைவேற்றுவதென்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்திருப்பதை எல்லோரும் நன்கு அறிவீர்கள்!

அடுத்துவரும் பொதுத் தேர்தலில், 150 தொகுதிகளில் தி. மு. கழகம் போட்டியிட வாய்ப்பு இருக்கிறதென்று, நாடெங்கும் சுற்றி விவரம் அறிந்துவந்துள்ள தேர்தல் ஆய்வுக்குழு, சுவையான செய்தியைத் தந்துள்ளது. இந்தச் சுவையான செய்தியைச் செயலாக்கிக் காட்ட. இலட்சக் கணக்கிலே பொருள் தேவைப்படுகிறது. கழகத் தோழர்கள் தேர்தல் களத்திலே வீரநடை போட்டு வெற்றிஉலா வரவேண்டுமானல், தொகுதி தோறும் செய்யப்பட வேண்டிய அடிப்படை நியாயமான செலவுகளுக்கே ஆயிரக்கணக்கில் ஆகும்.

எனவேதான், இச்சூழ்நிலையை ஆராய்ந்தறிந்த மத்திய செயற்குழு. தேர்தல் பணியை நிறைவேற்ற, குறைந்த அளவு ரூபாய் ஐந்து இலட்சம் தேவையென்று மதிப்பிட்டது.

சிறுதுளி பெருவெள்ளம்!

கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் பெருமுயற்சி எடுத்து. கைநிறைய காசுகளை அள்ளியள்ளி வழங்குவார்களேயானல், கழகம் எதிர்பார்க்கும் ரூபாய் ஐந்து இலட்சம் விரைவிலே சேர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

கிளைக் கழகங்கள், ஆங்காங்கு முறைப்படி முயற்சி எடுத்து. நிதி திரட்டி, திரட்டும் தொகையைச் சேரச்சேர அவ்வப்போது நேரே தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்ளுகிறேம்.

மாவட்டச் செயலாளர்கள், ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களை அவ்வப்போது தூண்டி, நிதி சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் பணியில் துணைபுரியுமாறு விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேம்.

தனி அமைப்புகளும், தனிப்பட்ட தோழர்களும் தனித்தனியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும் தேர்தல் நிதியும் நன்றியறிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

தேர்தல் நெருங்குகிறது!
பொறுப்பு மிகுகிறது!
கடமையை விரைந்து செய்ய வாரீர்!—வாரீர்!!

வணக்கம்

'அறிவகம்'
சென்னை-13
31—11—56

இரா. நெடுஞ்செழியன்
பொதுச் செயலாளர், தி. மு. கழகம்

குறிப்பு:—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:—
பொதுச் செயலாளர் —தி. மு. கழகம்,
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

போலந்து; ஹங்கேரி-புதிய பாடம்!

❊ 2-ம் பக்கம் தொடர்ச்சி

பாதை ஏற்றதாயிருக்கலாம்—அந்த நாட்டிற்கு!

ஆனால் அதே பாதையைத்தான் போலந்தும், ஹங்கேரியும் பின்பற்றவேண்டும் என்பதற்கு என்ன நியதி இருக்கிறது?

—இத்தனை நாளும் இதயத்தின் அடித்தளத்தில் அடக்கி வைத்திருந்தவர்கள் இன்று ஓங்காரக் குரலெடுத்துக் கேட்டுவிட்டார்கள் இந்தக் கேள்வியை!

அதையேதான் இதுவரையிலே இங்கு தென்னகத்துக் கம்யூனிஸ்ட்டுத் தோழர்களை நோக்கிக் கேட்டுக்கொண்டிருக்கிறது, தி. மு. கழகம்!

மாஸ்கோ கூடாதென்று கூறவில்லை, நாம்!

மாஸ்கோ நண்பனாக இருக்கட்டும்; எஜமானனாக இருக்க வேண்டாமென்றுதான் நவின்றோம், நாம்!

நாட்டுக்கு நாடு கொள்கையை அமுல் நடத்தும் வழிகளிலே மாற்றம் வேண்டும்; அதன்படிப் பார்க்கப் போனால் இந்திய உபகண்டம் முழுமைக்கும் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை வைத்துக் கொண்டிருப்பது கடைந்தெடுத்த பேதமை. எனவே தென்னகத்தின் கம்யூனிஸ்ட்டுத் தோழர்களே, உடனடியாக உண்மையுணர்ந்து திராவிட நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியென்று உங்கள் அமைப்பை மாற்றிக் கொள்ளுங்கள். அதற்கடுத்த நிமிடமே நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கலைத்து விடுகிறேன்.

—இதுபோன்ற கருத்தினை பல ஆண்டுகளுக்கு முன்பே அறிஞர் அண்ணா அவர்கள் பல மேடைகளில், மாநாடுகளில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்!

'பொதுவுடமை இலட்சியத்தை அடைய, ஒன்றுக்கு மேற்பட்ட வழி இருக்கிறது!'

—இன்று கோமுல்கா கூறுகிறார் இப்படி!

மாஸ்கோவுக்கு அடிபணியாதே! உனது நாட்டுக்கு ஏற்றபடி இலட்சியத்தில் திருத்தம் செய்து கொள்!

—நாகி நவில்கிறார் இந்த நல்ல வாசகங்களை!

இதையேதான் தி. மு. கழகமும் நமது கம்யூனிஸ்ட் நண்பர்களிடம் திருப்பத் திரும்பக் கேட்டுக் கொள்ளுகிறது—

★ மாஸ்கோ பாதையிலே மாற்றம் செய்யுங்கள்!

★ நீங்கள் குடியிருக்கிற திராவிட நாட்டுக்குத் தக்கபடி உங்கள் கொள்கையிலே திருத்தம் செய்யுங்கள்!

★ அதற்கு முதற்படியாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகி, அகில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்பதற்குப் பதிலாக அகில திராவிடக் கம்யூனிஸ்ட் கட்சி என்று புது அமைப்பு வகுத்துக்கொண்டு பணியாற்றுங்கள்!

இந்தக் கோரிக்கைகளைப் பார்த்ததும் அவர்களுக்கு பாரவையிலே பயம் தோன்றும்—சிந்தை கலங்கும், எப்படிக் கேள்வி எழுப்புவது—என்று!

சந்தேகம் கிளம்பும், டெல்லியிலிருக்கும் தலைமைப் பீடம் இந்த மாற்றத்துக்கு ஒப்புதல் தருமா—என்று!

அருமை கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் இதற்குச் சிறிதும் தயங்க வேண்டாம்!

டெல்லி தலைமைப் பீடம் நிச்சயமாக இதற்குச் சம்மதம் தராது; ஏனெனில் அவர்கள் வடநாட்டுக்காரர்களாயிற்றே! புதிய ஏகாதிபத்தியத்தின் தூண்களல்லவா அவர்கள்!

முழு பலத்தையும் காட்டி எதிர்ப்பு காட்டுவார்கள்!

அதற்கு நிச்சயம் பணிந்திடத் தேவையில்லை, நம்மவர்!

சில நாட்களுக்கு முன்பு பிரான்சு நாட்டிலும் இது போன்றதொரு நிகழ்ச்சிதான் நடைபெற்றது!

அகஸ்டே லெசியூர் என்பவர் பிரான்சு நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியின் பெரிய புள்ளி! வேண்டுமானால் அவரை பிரான்சு நாட்டின் ராமமூர்த்தி யென்றோ, ஜீவானந்தமென்றோ நினைத்துக் கொள்ளுங்களேன்!

அவரது எண்ணங்கள் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொள்கையினின்று மாறுபட்டுச் சென்றன!

'எனது லட்சியம்தான் நடைமுறைக்கு ஏற்றது; நாட்டு நடப்புக்கு ஒத்தது' என்று எவ்வளவோ சிரமப்பட்டு எடுத்துக் கூறினார்!

அந்த நாட்டு 'அஜாய்கோஷ்'கள் அவரது புதுமை முழக்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

அதன் பிறகு பிரான்சுநாட்டு ராமமூர்த்தி (அல்லது ஜீவானந்தம்) என்ன செய்தார்?

முயன்றோம்; தோற்றோம்—என்று முன் கையை மோவாயில் வைத்தபடி மூலையில் முடங்கினாரா?

இல்லை!

பிரிந்து சென்றார்! 'நல்லது சொன்னேன்; கேட்கவில்லை. பிரிந்து செல்கிறேன்.' என்று கூறியபடி கட்சிக் கூடாரத்தி லிருந்து விலகினார்!

புதியதொரு கட்சியை அமைத்தார்!

'ஜனநாயக தேசிய இயக்கம்' என்பது அதன் பெயர்!

திராவிட நாட்டுக்கென கொள்கைகளை வகுத்துக் கொண்ட தென்னகத்து கம்யூனிஸ்ட்கள் தங்களது கோரிக்கையை வட நாட்டுத் தலைமைப் பீடம் ஏற்காவிட்டால் 'வேண்டாம் இவர்கள் உறவு' என உதறிக் கொண்டு அவர்களது தொடர்பைத் துண்டித்துக் கொள்வதுதான் முறையானது!

சீறு பொதுவுடமைப் பூங்கா விற்கு தனக்கென வகுத்துக் கொண்ட பாதையிலே செல்கிறது!

போலந்தும், ஹங்கேரியும் கூட மாஸ்கோ பாதையிலிருந்து விலகி தங்கள் சொந்தப் பாதையிலே தான் பிரயாணமாகின்றன!

பிரான்சு நாட்டு அகஸ்டே லெசியூர் உலகத்தின் இதர கம்யூனிஸ்ட்டுகளுக் கெல்லாம் புதியதொரு பாடத்தைக் காட்டியிருக்கிறார். அருமையான சர்தர்ப்பம்! தாயகத்தின்மீது தங்களுக்குள்ள பற்றுதலைக் காட்டிக் கொள்ள பக்குவமான வேளை! தென்னகத்துக் கம்யூனிஸ்ட் தோழர்களே! மீண்டுமொரு முறை அறிஞர் அண்ணாவின் வாசகத்தை நினைவு கூறுங்கள்! வருங்காலத் திராவிடச் சந்ததியினர் உங்களை நிந்திக்கப் போவதைத் தடுத்துக் கொள்ள இன்றே தயாராகிவிடுங்கள்!

முன்பு இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தது பாகிஸ்தான் பிரிந்த பிறகு பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சியென்று இரண்டாகப் பிரியநேர்ந்ததைப் போல; நாளை திராவிடம் பிரிந்ததும் திராவிடக் கம்யூனிஸ்ட் கட்சியென்று நீங்கள் பிரியாமல் இன்றே உங்கள் வடநாட்டுத் தலைமைப் பீடத்திலிருந்து பிரிந்து வாருங்கள்!

'அய்யோ; தாமதம் செய்துவிட்டோமே?'—என்று நாளை தலையில் அடித்துக் கொள்வதைத் தடுப்பதற்காக இன்றே காரியமாற்றத் துவங்குங்கள்! இன உணர்வு பெறுங்கள்! இழிவு துடையுங்கள்!

பிறைவானம்

❊ 11-ம் பக்கத் தொடர்ச்சி

வில்லையா? கண்ணன் இப்படி எல்லாம் நினைத்தான், அவனுக்கு அழுகையே வந்து விட்டது.

முடிவில், அவனது உள்ளத்திலே தலை தூக்கிய அந்தத் 'தகாத நினைவு' துரத்தப் பட்டே விட்டது! 'நாளை முதல் உழைக்க வழி தேடுவேன்; மாடென உழைப்பேன்; மானம் இழக்காமல் வாழ்வேன்; வாழ்ந்து வளர்வேன்; அப்பாடா... பிழைத்தேன்...... இன்று நிம்மதியாகத் தூங்குவேன்'—என்ற முடிவோடு பூங்கா ஒன்றில் நுழைந்தான். பனி படர்ந்த 'பெஞ்சி'யில் படுத்தான்!

அப்போது...

"அம்மே...அம்மே..." என்ற குழந்தையின் அழுகுரல் ஒன்று எழும்பியது. கண்ணன் திடுக்கிட்டு எழுந்தான். பூங்கா வாசலில், இரண்டு வயதுக் குழந்தை ஒன்று கண்களைக் கசக்கி அழுதபடி நின்றது. கண்ணன் ஓடினான். குழந்தை தனியாகத்தான் நின்றது. அவனைக் கண்டதும் வீரிட்டு அலறியது! "பாப்பா! யார் பாப்பா நீ? உன் வீடு எங்க இருக்கு?... சொல்லு, கொண்டு விடரேன்!" என்று பரிவுடன் கேட்டான்.

அதே சமயம்...

"ஐயோ, மகனே!" என்று அலறிக் கொண்டு ஓடிவந்தார், ஒருவர்!

"எங்கெங்கே தேடுவது, என் செல்வமே?" என்று அழுது கொண்டு வந்தார் குழந்தையின் தாய்!

இருவரும் கண்ணனைப் பார்த்தார்கள்! "அடப் பாவி! குழந்தையை நீ தான் தூக்கி வந்தாயா?" என்று ஏககாலத்தில் அலறினார்கள்! குழந்தையின் உடலில் கிடந்த நகைகளைச் சோதித்தனர்.

சப்தம் கேட்ட போலீஸ்காரன் ஒருவன் எங்கிருந்தோ ஓடிவந்தான். கண்ணனின் கரங்களைக் கப்பென்றுப் பற்றினான்!

கண்ணன் என்ன சொல்லியும் பலனில்லை! குழந்தையைத் தூக்கி வந்து, நகைகளைத் திருட முயன்றதற்காக அவனுக்கு மறு நாள் 'சிறைத் தண்டனை' கிடைத்து விட்டதாம்!

●

—போலந்து ஹங்கேரி தரும் படிப்பினை தென்னகத்துக் கம்யூனிஸ்ட்டுகளைப் பார்த்து நம்மை இவ்வாறுதான் அறைகூவல் எழுப்பத் தூண்டுகிறது.

ஹங்கேரி—போலந்து ஆகியவற்றின் நடத்தை மாஸ்கோ வால்கூட அங்கீகரிக்கப்பட்டு விட்டது, ஆமாம்; மாஸ்கோவே மாறிவிட்டது!

அந்தக் கண்ஜாடையை நுட்பமாகப் புரிந்துகொண்டு

❊ தொடர்ச்சி 4-ம் பக்கம்

"பஞ்சமில்லா பூமி!"

"கண்ணபிரானின் திருவிளையாடல்களை என்னென்று சொல்வது? எம்பெருமான் அருளிச் செய்த ஆனந்தக் கூத்துகள்...... அடடா!...எப்படித்தான் வர்ணிப்பது? பக்த கோடிகளே! படமெடுத்தாடும் பாம்பை அடக்கிஞன்—பாலகனின் செயலா அது? ஆண்டவனின் அருள் தேடும் அன்புள்ளவர்களே!......அதை நினைத்த நேரத்தில் இருதயம் ஆனந்தக் கூத்தாடுகிறதே... வெண்ணெய் திருடி விளையாடிஞன் நீலவர்ண சியாமளரூபன்! உள்ளம் பூரிக்க வில்லையா? கோபிகா ஸ்திரீகளின் வீட்டுக்குள் மெள்ள நுழைந்து—உரியிலே தொங்கும் கலயங்களைத் தட்டி உடைத்து — பசும் வெண்ணெயை உண்டு களிப்பான்! அந்த அற்புதத் திருட்டு கண்டு கதறி அழுவர் பெண்கள்; அதைக் கண்டு களிப்பான் காந்த ரூபன் — நம் கண்கண்ட கடவுள்! அந்தக் கண்ணபிரான் விளையாட்டுக்களை விளக்க இந்தச் சபை போதாது...... போதவே போதாது...தினம் தினம்..."

கண்ணன் கோயிலில் கதா காலட்சேபம் பக்த கோடிகளின் தூக்கத்துக்கிடையே நடைபெற்றுக் கொண்டிருந்தது!

"வெண்ணெய் திருடி விளையாடிஞன் கண்ணன்......."—என்ற அந்தச் சொற்கள் கோயில் வாசலில் சுருண்டு கிடந்த கண்ணனின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன. இந்தக் கண்ணன் நீலவர்ண சியாமள ரூபன் அல்ல; பசியும், பட்டினியும், பயங்கர வறுமையும் பாழ்படுத்தியிருந்த கோர சொரூபன்! அவனுக்கு வேண்டியது வெண்ணெயல்ல; பருக்கை உணவு கிடைத்தாலும் அதைப் பல சுவை உணவென்றுஉண்டு களிப்பான்!

சொறி பிடித்த தெரு நாய் ஒன்று தன் இடத்திற்குப் பங்காளியாக வந்து சேர்ந்தவுடன் எழுந்தான் அவன். காலட்சேபம் நடந்து கொண்டேயிருந்தது...கண்ணன் யோசித்தான். கண்ணபிரான் அவதாரத்தில் எம்பெருமான் செய்த ஆனந்தக் கூத்துகள் பற்றியல்ல; உடல் சுருட்டும், உயிர் பறிக்கும் பசி போக்க வழி என்ன? இதுதான் அவன் யோசனை! யோசித்தான் – முடிவும் செய்தான். "என்னண்ணே எங்கே பஞ்சம்? வேளா வேளைக்கு பணி அடிச்ச சோறு—நெனைச்ச நேர மெல்லாம் தூக்கம்! கொடுத்து வைக்கணுமே அண்ணே..." என்று அன்ருெரு நாள் சத்திரத்துத் திண்ணையில் யாரோ ஒரு பிச்சைக்காரன் — ஏதோ ஒரு 'பஞ்சமில்லா பூமி'யைப் பற்றி வானளாவப் புகழ்ந்து கொண்டிருந்தது அவன் நினைவுக்கு வந்தது. அந்த இடம்—ஆனந்தமான இடம் - அங்கே தானும் போய் விட்டால் என்ன? போய்த்தான் தீரவேண்டும்! பைத்தியக்காரன், அந்தப் பொல்லாத முடிவுக்கு வந்து விட்டான். வெங்கொடுமைக்கும் தாங்கொணு சித்ரவதைகளுக்கும் உறைவிடமான 'சிறைச்சாலை'க்குச் சென்று விடத்தான் முடிவெடுத்து விட்டான், உணவு காணுது குடல் வற்றி உடல் சிறுத்துப் போன அந்த ஏழைச் சிறுவன்! அதற்குத்தான் என்ன வழி? வெண்ணெய் திருடிய கண்ணன் அவன் கருத்திலே நின்று 'கீதா உபதேசம்' செய்தான்!

கண்ணன் வேக வேகமாக நடந்தான். பஸ் நிற்குமிடத்தை அடைந்தான். சற்று நெறிசலாகத்தான் இருந்தது. எனினும் புத்தம் புதிய தீபாவளி உடை அணிந்திருந்த ஒரு பெரிய மனிதரின் பையிலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த 'மணிபர்ஸ்' ஒன்று கண்ணனின் கண்களுக்குத் தென்படாமல் இல்லை. கண்ணனின் கரங்களும், கால்களும் நடுங்கத்தான் செய்தன. பயந்தால் சிறைச்சாலைக்குப் போக முடியுமா? பல நாள் பட்டினி கிடந்த பாழும் வயிற்றுக்கு வேளை தவருது உணவுதான் கிடைக்குமா? கண்ணன் அவரை நெருங்கிஞன். அந்தப் 'பர்சை'யும் தொட்டு விட்டான்; இழுத்தான். அதே கணம் 'டமால்' என்று பக்கத்திலிருந்த வீட்டு வாசலில் வெடி சப்தம் எழுந்தது. எதிர்பாராத அதிர்ச்சி–கை நழுவியது! பர்ஸ் கீழே விழுந்து விட்டது! மறுகணம் 'ஐயோ, திருடன்! திருடன்!!" என்று அலறிஞர் அந்த மனிதர், கீழே விழுந்த பர்சை எடுத்துக் கொண்டு. கண்ணன் சிலையாகி விட்டான். 'அதோ, திருடன்! விடாதே! பிடி! பிடி!" என்ற அலறல் எழும்பியது! கண்ணன் எதிர்பார்த்துக் காத்து நின்ருன். ஆனுல், போலீஸ்காரன் ஒருவனே, வெடி சப்தம் கேட்டு மிரண்டோடிக் கொண்டிருந்த ஒரு அரைப் பயித்தியத்தை விரட்டிக் கொண்டு ஓடிஞன்.

கண்ணன் திடுக்கிட்டான். "ஐயா, நான்தான் பர்சை எடுத்தேன்! நான்தான் எடுத்தேன்!!" என்ருன்.

"திருடன் நிற்பானு? நின்ருல்தான் ஒத்துக்குவானு?" என்ருர் ஒருவர்.

"சரிதான்; இது முழுப் பைத்தியம் போலேயிருக்கு!" என்ருர் மற்ருெருவர்.

'பஸ்' வந்தது. எல்லோரும் போய்விட்டனர். முயற்சியில் தோல்வி யடைந்த கண்ணன் நடக்க ஆரம்பித்தான், 'அந்த இடம்' செல்வதற்கு வேறு வழிகாண!

"சிறைச்சாலை என்ன செய்யும்?..." என்ற வானெலிப் பாடல் கேட்டுத் திரும்பிஞன். "பூங்கா பவன்" ஹோட்டல் வர்ணஜாலம் காட்டி அவனை வரவேற்றது! கண்ணன் வேகமாக நடந்தான். இப்போது அவன் தனது 'இலட்சிய இட'த்திற்குப் போக புது வழி கண்டு பிடித்துவிடடான். நேராக ஹோட்டலுக்குள் நுழைந்து வயிறு நிறைய சாப்பிட வேண்டியது; பணம் கேட்டால் விழிப்பது! பிறகு அவன் எண்ணம் வலுக்கட்டாயமாக நிறைவேறிவிடுமல்லவா?

கண்ணன் நுழைந்தான்; உண்டான்; 'பில்' வந்தது; வெளியே வரும்போது கையை விரித்தான்! 'என்னைப் போலீஸ்காரனிடம் ஒப்படைத்து விடுங்களேன்' என்ற பாவனையில் நின்ருன். ஆனுல் ஹோட்டல் முதலாளியோ 'பளார், பளார்' என்று அவன் கன்னத்தில் மாறிமாறி அறைந்தார்! "மானங் கெட்டவனே மண்ணைத் தின்னேண்டா!" என்று மானம் போகத் திட்டிஞர்! கழுத்தைப் பிடித்து மூர்க்கத்தனமாகத் தள்ளிஞர்!

உருண்டு, புரண்டு, மிரண்டு நடுத்தெருவில் வந்து விழுந்தான் கண்ணன்! பலன்...? ஐயோ, ஐயோ! என்ன இது தொல்லை! நடக்க வில்லையே நினைத்தது!—என்று சலித்துக் கொண்டான்! என்ன செய்வது? இம்முறையும் அவனுக்குத் தோல்விதானே!

கண்ணன் தன் கன்னத்தைத் தடவிப் பார்த்தான். ஹோட்டல் முதலாளியின் மிருக அடி அவன் கன்னத்தில் தடிப்பை ஏற்படுத்தி யிருந்தது; அவனுக்கு அழுகையே வந்து விட்டது! அப்போது அங்கு ஒரு போலீஸ்காரன் வந்தான். கண்ணன் தயாராஞன், அவன் அழைப்பான் என்று! ஆனுல் அவனே, "தம்பி! நடு ரோட்டிலே நிக்காதே! காரு, கீரு வரப் போவுது, ஓரமாப் போம்மா!" என்று புத்திமதி சொல்லி விட்டு நகர்ந்தான்!

கண்ணனுக்கு அழுகையே வந்து விட்டது. தற்காலிகமாகப் பசியைத் தணித்துக் கொள்ள அவன் செல்ல விரும்பிய இடத்திற்கும் போகமுடியவில்லையே! கண்ணன் வெகு தூரம் நடந்து விட்டான். மாளிகை ஒன்றிலிருந்து எழும்பிய குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது.

"...கொட்டும் மழையில், சேறிலும் சகதியிலும் தடுமாறித் தத்தளித்து, இரவல் வாங்கிப் படித்தப் புத்தகத்தை உரியவரிடம் சேர்ப்பித்தான் அந்தத் தம்பி! அவன் ஏன் மழையையும், குளிரையும், கும்மிருட்டையும், 'சீ' என்று உதறித் தள்ள வேண்டும்? எல்லாம் நாணயத்திற்காக! காலம் தவறிவிட்டான் கயவன்; அயோக்கியன்; திருடன்!—என்று தன்னைத் தவருக நினைக்கக் கூடாதே என்று நினைத்தான், அந்தச் சிறிய வயதுப் பெரிய மனிதன் ஆப்ரகாம் லிங்கன்! எத்தனை உயர்ந்த பண்பு! தங்கத் தங்கைகளே! அந்த ஈடில்லா நல்ல நினைப்புதான் அவனை அகிலம் போற்றும் மேதையாக—அடிமை விலங்கொடித்த அமெரிக்காவின் தந்தையாக — ஆக்கிவிட்டது!..."

குழந்தைப் பத்திரிகை ஒன்றில் வெளி வந்திருந்த கட்டுரை ஒன்றை உணர்ச்சியோடு வாய் விட்டுப் படித்துக் கொண்டிருந்தது, அந்த வீட்டுச் சிறுமி!

கோவிலில் கேட்ட காலட்சேபம் — இந்தக் கருத்துள்ள வரிகள் — இரண்டையும் தன்னையும் அறியாமல் ஒரு கணம் ஒப்பிட்டு விட்டான் கண்ணன்!

மறுகணம், 'ஐயோ" என்று அலற வேண்டும் போலிருந்தது அவனுக்கு. தான் செய்ய இருந்தது — விரும்பி வரவேற்றுக் காத்திருந்தது — எத்தனை பயங்கரமான, கேவலமான, வெட்கக் கேடான, கோரச் செயல் என்பதை அவனுக்கு உணர்த்தி விட்டது அந்தக் கண நேர சிந்தனை!

கண்ணன் வெட்கப் பட்டான்! துன்பத்தைத் தாங்க முடியவில்லை என்பதற்காக மானம் கெட்ட செயலில் ஈடுபட நினைத்தது தவறல்லவா? கீழ்மைக் குண மல்லவா? குப்பை மேட்டிலே, புழுதி மண்ணிலே தங்கள் குழந்தைப் பருவத்தைக் கழித்த எத்தனையோ பேர்கள் — உழன்று, முயன்று, இறுதியில் உலகம் புகழ் மனிதர்களாய் — 'அவனு இவன்!' என்று மூக்கில் விரல் வைத்து வியக்கும் அளவுக்கு மேதைகளாய்—சாதனை பல புரிந்த அறிஞர்களாய் — மாற

✻ தொடர்ச்சி 10-ம் பக்கம்

அண்ணுதாசன் ; கல்லிடைக் குறிச்சி

(?) மனிதனல் ஆகாத காரியம் எது ?

பண்டித நேருவின் நாக்கை வளைப் பது; காமராசருக்கு உடனடி யாக இன உணர்வை ஊட்டு வது ; சுப்பிரமணியனுருக்கு அரசியல் கண்ணியம் கற்பிப்பது — இவைதான்!

எஸ். மாரிமுத்து ; காட்டுப்புதூர்

(?) சில மனிதர்கள் கற்சிலையை பூஜிக்கிருர்களே : ஏன் ?

அது போன்றே அசைந்து கொடுக்க மறுக்கும் காமராசரைச் சிலர் பூஜிக்கவில்லையா ; அதைப் போலத்தான் இதுவுமொரு மூடநம்பிக்கை !

எம். அய்யாதுரை ; எழும்பூர்.

(?) உங்கள் கட்சியின் நல்ல நோக்கம் என்ன ?

நல்ல நோக்கம் ஒன்றினை வைத் திருக்கிரேமே ; அதுதான் !

(?) தேர்தலுக்குப் பிறகு உங்கள் கட்சி கலகலத்து விடுமா ?

அத்தகைய சிறப்புக்குரியது கம்யூ னிஸ்ட்டு கட்சி ஒன்றுதான், தோழரே !

ஏ. கே. துரைவேலு;
செகந்திராபாத்.

(?) இலங்கைத் தமிழருக்கும். சென்னைத் தமிழருக்கும் உள்ள வேறுபாடு என்ன ?

இலங்கைத் தமிழர்கள் தாயைப் பிரிந்த சேய்கள்!

சென்னைத் தமிழர்கள் தாயை மறந்த சேய்கள்!

(?) பிச்சைக்காரர்கள் பிரச்சினை எப்போது ஒழியும்?

அரசியலில் வடநாட்டிடம் பிச்சை வாங்குவோர் ஒழியும்போது!

கே. எஸ். பிச்சாண்டி ;
திண்டிவனம்

(?) நேரு தென்னுட்டில் பிறந் திருந்தால் இந்நேரம் அவர் காமராசராகத்தானே இருப் பார் ?

இல்லை ; அவர் சிந்திக்கும் திறன் படைத்தவர் ! தென்னுட்டில் பிறந்திருந்தால் இந்நேரம் அவர் ஒரு அறிஞர் அண்ணுவாகத் தான் மாறியிருப்பார். ஏனெ னில் இப்போது அவர் ஒரு வட நாட்டுக்காரராக இருப்பதனுல் தானே திராவிடநாட்டுக் கோரிக் கையைப் புரிந்து கொள்ளமறுக் கிருர் !

கு. இரா. பரமசிவன்; காரமடை

(?) பஞ்சசீலம் என்பவை என்ன ?

ஆணவம்; அடக்குமுறை; ஊழல்; மொழிவெறி; ஏகாதிபத்தியப் பித்தம்—இப்படியும் அதற்கு விளக்கம் தரலாம்!

வீ. கோமதிநாயகம்; தூத்துக்குடி.

(?) பச்சை மரத்தில் ஆணி அடித் தால் எப்படி இருக்கும்?

பச்சைத் தமிழரது உள்ளத்தில் இருக்கும் ஆரிய, வடநாட்டு ஏகாதிபத்திய கொள்கையைப் போல் பலமாகப் பிடித்துக் கொள்ளும்!

(?) விடுதலைக்காகக் தோன்றிய காங்கிரஸ், இன்று வீணர்களின் விளையாட்டு பூமியாக மாறி விட் டது கண்டு உண்மையிலேயே வருந்தக் கூடிய காங்கிரஸ்காரர் யாராவது உங்களுக்குத் தெரி யுமா ?

தெரியும் ; எனக்கு மட்டுமல்ல ; உங்களுக்குக்கூட ! ஆனுல் அவரோ யமுனு நதிக் கரையில் 'ராஜ கட்டத்தி'ல் மீளாக உறக் கத்தில் அல்லவா ஆழ்ந்து கிடக் கிருர் !

காந்தா; பதுளை.

(?) ஒருவனே தேவன்—யார் அந்த ஒருவன்?

உருவும் திருவுமற்ற 'நல்ல உள் ளம்' தான்!

மகளிர் மன்றம்
துவக்க விழா

4-11-56 மாலை 5 மணிக்கு சென்னை – பெத்துநாயக்கன் பேட்டை அம்மன் கோயில் தெருவிலுள்ள டாக்டர் குரு சாமி முதலியார் டி. டி. வீ. உயர் நிலைப் பள்ளியில் மக ளிர் மன்றத் துவக்க விழா நடைபெறும்.

டாக்டர் எஸ். தருமாம் பாள் அம்மையார் தலைமை தாங்குவார்; மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் மன்றத்தைத் துவக்கி வைப் பார்; தோழியர்கள் பலர் பேசுவர்; அண்ணு அவர்கள் கருத்துரை வழங்குவார்.

ஆசிரியரும், அச்சிடுப்வரும், வெளியிடுபவரும் மு. கருணநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு சென்னை-6.